

புதியதோர் உலகம் செய்வோம்


# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 பிப்ரவரி 20 - 26 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 46




**தற்கொலைக்குத் தள்ளும் பா.ஜ.க.**
நகர்ப்புற அமைப்புகளுக்கான தேர்தல் பணிகளில் மும்முரமாக செயல்பட்டு வருவீர்கள். பிப்ரவரி 22 ஆம் நாள் வாக்கு >>> ப 02



**சமுதாயத்தை இயக்கும் சக்திகள்**
சமுதாயத்தை இயக்கம் சக்திகள் யாவை? மார்க்சியம் இதற்கு மூன்று சக்திகளைக் காட்டுகிறது. 1) உற்பத்தி கருவிகள் >>> ப 05



**50% மருத்துவ இடங்களுக்கு கட்டணம் நிர்ணயித்திடுக**
மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான சேர்க்கை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தேசிய மருத்துவ ஆணையம் தனியார் >>> ப 15



# எடப்பாடி பழனிசாமி 27 நாட்களில் கைதாவார்!



## தேர்தல் பிரச்சாரத்தில் இரா.முத்தரசன் பேச்சு!

**தேனி:** அதிமுக இணை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி இன்னும் 27 நாட்களில் கைதாவார் என இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தேர்தல் பிரச்சாரத்தின் போது தெரிவித்திருக்கிறார்.

முன்னதாக திமுக ஆட்சிக்கு இன்னும் 27 அமாவாசைகள்தான் இருக்கிறது என்று எடப்பாடி பழனிசாமி பேசியிருந்தார்.

திமுகவின் ஆட்சியை கலைத்து விடலாம் என எடப்பாடி பழனிசாமி பகல் கனவு காண்பதாகவும் அது ஒரு போதும் நடக்காது எனவும் இரா.முத்தரசன் பேசினார்.

பிரச்சாரக் களத்தில் இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கூறியுள்ள இந்த அதிரடித் தகவல் அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக கருதப்படுகிறது.

**நகர்ப்புற உள்ளாட்சி**

தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் அனல் பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அந்த வகையில் தேனி மாவட்டம் போடியில் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற இரா.முத்தரசன், “எடப்பாடி பழனிசாமி இன்னும் 27 நாட்களில் கைது செய்யப்படுவார்” எனப் பேசி அதிர வைத்திருக்கிறார்.

பண மோசடி வழக்கில் எடப்பாடி பழனிசாமியின் உதவியாளர் கைது செய்யப்பட்டதை போல் அவரும் விரைவில் கைதாவார் என்று பேசினார் இரா.முத்தரசன்.

மேலும், திமுக ஆட்சி கலைக்கப்படும் என எடப்பாடி பழனிசாமி பகல் கனவு கண்டு வருவதாகவும் அவரது எண்ணம் ஒரு நாளும் ஈடேறாது எனவும் முத்தரசன் தெரிவித்துள்ளார்.

27 மாதங்களில் திமுக ஆட்சி கலைக்கப்படும் என எடப்பாடி பேசுகிறார்,

ஆனால் அவர் இன்னும் 27 நாட்களில் சிறைக்கு செல்வது உறுதி எனவும் பேசினார்.

**ஜனசக்தி**

**சந்தா விவரம்**

ஆண்டுச் சந்தா ரூ.500/-
2 ஆண்டுச் சந்தா ரூ.1000/-
ஆயுள் சந்தா ரூ.5000/-

Janasakthi Trust
A/c No 108302000009999
IFSC No: IOBA 0001083
Indian overseas bank
Mylapore branch
Chennai - 600 004

ஜனசக்தி
பாவை பிரிண்டர்ஸ் முதல் மாடி, 142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 600014
✆: 9444331138

## நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் பட்டியல்

## பேரூராட்சி

| | | |
|---|---|---|
| விழுப்புரம் மாவட்டம் | | |
| அரகண்டநல்லூர் | 5 | ஏ.ஜாகிர் உசேன் |
| செங்கல்பட்டு மாவட்டம் | | |
| இடைக்கழிநாடு | 15 | உஷாராணி ரவி |
| கன்னியாகுமரி மாவட்டம் | | |
| கடையாலு மூடு | 2 | சுகுமாறன் |
| பூதப்பாண்டி | 8 | அணில்குமார் |
| வள்ளிமலை | 2 | சுதா மதன் |
| கருங்கல் | 5 | அகஸ்டின் ஜார்ஜ் |

## எதிரும் புதிரும்


திமுக ஆட்சிக்கு இன்னும் 27 அமாவாசைகளே இருக்கின்றன
- எடப்பாடி பழனிசாமி



அமாவாசை அதிமுகவிற்கு
அதை தொடர்ந்து வருகிற
பொளர்ணமிகள் திமுகவிற்கு

## உ.பி., பஞ்சாப், மணிப்பூர் சட்டமன்றத் தேர்தல்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடும் இடங்கள்

**உத்தரப்பிரதேசம் 38**




**தொகுதிகள் விபரம்:**

1.சான்பே, 2. சத்தா, 3. பித்தாரி செயின்பூர், 4. பிசல்பூர், 5. லக்கிம்பூர், 6. பிகாபூர், 7. ஹர்தோய், 8. சரோஜினி நகர், 9. மெகரோனி, 10. ஹமீர்பூர், 11. திந்துவாரி, 12. சித்ரக்கூட், 13. விஸ்வநாத் கஞ், 14. பரா, 15. அயோத்தியா, 16. நன்பரா, 17. துளசிபூர், 18. மகராஜ் கஞ், 19. கயின்பியார் கஞ், 20. பிப்ரைச், 21. பசில்நகர், 22. ராம்பூர் கர்கானா, 23. நிஜாமாபாத், 24. மெஹ்நகர், 25. மௌ, 26. பன்சித், 27. ஜகானியன், 28. ஜாங்கிப்பூர், 29. பிந்ரா, 30. ராபர்ஸ் கஞ்ச், 31. பில்கர், 32. பாபெரு, 33. நராயினி, 34. ஆயுஷா, 35. ஹக்கா, 36. பந்தா, 37. தம்குகிராஜ், 38. காசிபூர் சதர்.


**பஞ்சாப் 07**

**தொகுதிகள் விபரம்:**

1. நபா, 2. பங்கா, 3. பதான்கோட், 4. படின்டா, 5. அமிர்தசரஸ் மேற்கு, 6. பயல், 7. புத்லதா.



**மணிப்பூர் 02**



**தொகுதிகள் விபரம்:**

1. கம்சிங், 2. கவுரை.






# தற்கொலைக்குத் தள்ளும் பா.ஜ.க.! துணை போகும் அ.தி.மு.க.!

**பேரன்புமிக்க தோழர்களே!**

**நகர்ப்புற அமைப்புகளுக்கான தேர்தல் பணிகளில் மும்முரமாக செயல்பட்டு வருவீர்கள். பிப்ரவரி 22 ஆம் நாள் வாக்கு எண்ணிக்கையில் வேட்பாளர்களும், முகவர்களும் மிகக் கவனமாக செயல்பட வேண்டும்.**

வாக்காளர்கள் தங்களது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றியிருப்பதை உறுதிப்படுத்திடும் நாள்தான் வாக்கு எண்ணிக்கை நாளாகும்– அந்நாளில் வாக்காளர்கள் நமது கட்சிக்கும், நமது அணிக்கும் அளித்திட்ட வாக்குகளை உறுதிப்படுத்திட வேண்டிய பொறுப்பும், கடமையும் வேட்பாளர்களுக்கும், முகவர்களுக்கும் உள்ளது என்பதனை நாம் நன்கறிவோம்!

நகர்ப்புற அமைப்புகளுக்கான தேர்தலில் நமது மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தொடர்கின்றது. தேர்தலுக்காக மட்டுமல்ல, தேர்தலையும் தாண்டி, நமது நாட்டை கலவர பூமியாக மாற்ற, மதக் கலவரங்களை தூண்டி அரசியல் ஆதாயம் தேடும், மிக குறுகிய நோக்கத்தைக் கொண்ட ஆர்எஸ்எஸ் அமைப்பின், அதன் அரசியல் பிரிவான பாஜக அதனுடைய ஆட்சி மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள், நாட்டு மக்களை தற்கொலைக்கு தள்ளி கொண்டு இருக்கின்றது.

நீட் நுழைவுத் தேர்வு காரணமாக தமிழகத்தில் அரியலூர் அனிதா தொடங்கி 25 மாணவர்கள் உயிர் பலியாகி இருக்கிறார்கள்.

ஒன்றிய அரசின் பிற்போக்குத்தனமான, பிடிவாத கொள்கையின் காரணமாக எதிர்கால மருத்துவர் கனவு, பகல் கனவாகிய காரணத்தால் இக்கொடுமை நிகழ்ந்துள்ளது.

உலகத்தை ஆட்டிப்படைத்திட்ட கொடிய கொரோனா இன்னும் முடிந்தபாடில்லை; தொடர்கின்றன.

கொரோனா காலத்தில் திடீர் என அறிவிக்கப்பட்ட முழு ஊரடங்கின் காரணமாக நாட்டு மக்கள் அனைவரும் நிலை குலைந்து போனார்கள். அப்பாதிப்பில் இருந்து இன்றளவும் மீள முடியவில்லை.

மாநிலம்விட்டுமாநிலம்சென்று,பிழைப்புதேடி அலைந்திட்ட மக்களின் துயரம் தொடர்கின்றது. வேலையின்மை, கடன் சுமையால் தற்கொலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதற்கும் பெருமளவு வேலைவாய்ப்பு வழங்கி வரும் நிறுவனங்கள் சிறு, குறு, நடுத்தர தொழில்கள் ஆகும்.

ஒவ்வொரு நிறுவனத்திலும் பத்து, இருபது, முப்பது பேர் என தொழிலாளர்களாக பணியாற்றி வந்தனர்.

அத்தகைய வேலைவாய்ப்பை வழங்கி வந்த சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டன. முழு ஊரடங்கில் மூடப்பட்ட நிறுவனங்கள் இன்றளவும் மூடப்பட்டு கிடக்கின்றன.

திறக்கப்பட்ட நிறுவனங்களில் கூட முழு அளவிற்கு வேலைவாய்ப்பு வழங்க முடியாத நிலை.

இதன் காரணமாக வேலையின்மை மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டுள்ளது. பெரும் நட்டத்திற்கு ஆளான இந்நிறுவனங்களை காப் பாற்ற வேண்டிய பொறுப்பும், கடமையும் ஒன்றிய அரசிற்கு உள்ளது. அத்தகைய கடமையை, பொறுப்பை ஒன்றிய அரசு நினைத்துக்கூட பார்க்காதது மிகுந்த வேதனைக்குரியது.

பொருளாதாரரீதியாக உதவிட வேண்டிய ஒன்றிய அரசு, கண்டும் காணாமல் இருப்பது, தொழில் புரிவோருக்கு மிகுந்த இழப்பை ஏற்படுத்தி, மீளமுடியாத கடன் சுமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதன் காரணமாக கடன் சுமை, வேலையின்மை ஆகிய பிரச்சினைகள் காரணமாக நாட்டு மக்கள் தற்கொலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பதனையும், எவ்வளவு பேர் செத்து மடிந்தனர் என்பது குறித்தும் ஒன்றிய அரசின் உள்துறை இணை அமைச்சர் நித்தியானந்த்ராய் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் புள்ளிவிவரங்கள் அடிப்படையில் அமைச்சர் அளித்திட புள்ளி விவரங்கள் வருமாறு:

கடந்த 2018 முதல் 2020 வரையிலான காலத்தில் வேலையின்மை, திவால் மற்றும் கடன் பிரச்சினைகள் காரணமாக 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவர்களில் கடன் தொல்லையால் மட்டும் 16 ஆயிரத்து 91 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். வேலையின்மை காரணமாக 9140 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2018ல் 4970 பேர், 2019ல் 5908 பேர், 2020ல் 5213 பேர் என்ற எண்ணிக்கையில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இத்தகைய விவரங்களை எங்கோ அல்ல, நாடாளு மன்றத்தில் ஒன்றிய உள்துறை இணையமைச்சர் தெரிவித்த புள்ளிவிவரங்கள் ஆகும்.

ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை வழங்குவோம் என்று வாக்குறுதி அளித்த மோடி அரசு, தற்போது வேலையின்மை காரணமாக செத்து மடிந்தோர் எண்ணிக்கை எவ்வளவு என்று தெரிவிக்கின்றது.

இந்திய குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் வங்கிக் கணக்கில் ரூ.15 லட்சம் வழங்குவோம் என்று வாக்குறுதி அளித்திட்ட மோடி அரசாங்கம், இன்று கடன் தொல்லையால் மடிந்தோர் எண்ணிக்கையை கூச்ச நாச்சமின்றி தெரிவிக்கின்றது.

**தங்களது பொருளாதார கொள்கையால் நாட்டு மக்களை சாகடித்து வரும் மோடி அரசு, தங்களின் தவறான கொள் கைகளை மாற்றிக் கொள்வதற்கு மாறாக, மக்களை திசை திருப்ப, மீண்டும் மீண்டும் மதக்கலவரங்களை வெட்கமின்றி திட்டமிட்டு தூண்டுகின்றது.**

கர்நாடக மாநிலத்தில் இஸ்லாமிய மாணவர்கள் ஹிஜாப் அணிந்து வரக் கூடாது என்று தடை விதித்து கடந்த பிப்ரவரி 5ஆம் நாள் உத்தரவு பிறப்பித்தது.

அரசு உத்தரவு மட்டுமன்றி பாஜகவின் வன்முறை கூட்டம் காவி உடை தரித்து கல்லூரிக்குள் நுழைந்து, இசுலாமிய மாணவிகளை அச்சுறுத்தும் அவலங்களை, அநாகரீகத்தை மேற்கொள்கிறது.

கல்லூரியில் பறந்து கொண்டிருந்த தேசியக்கொடியை இறக்கி விட்டு, அக்கம்பத்தில் காவி கொடியை ஏற்றுகின்றனர்.

இத்தகைய தேச விரோத செயலை மேற்கொள்வதை பாஜக ஆளும் கர்நாடக அரசின் காவல்துறை கைகட்டி, வாய்ப் பொத்தி வேடிக்கை பார்க்கின்றது.

கர்நாடக பாஜக அமைச்சர் ஒருவர் டெல்லி செங்கோட்டையில் பட்டொளி வீசிப் பறக்கும் தேசியக்கொடியை இறக்கி விட்டு காவிக் கொடியை ஏற்றுவோம். காவிக் கொடி தேசியக் கொடியாக அறிவிக்கப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்று பகிரங்கமாக அறிவிக்கிறார்.

ஒரே நாடு, ஒரே தேர்தல் என்று பிரகடனம் செய்கின்றனர். 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலுடன் அனைத்து சட்ட மன்றங்களுக்கும் சேர்த்தே தேர்தல் நடைபெறும் என்று பாஜகவினர் பகிரங்கமாகவே தெரிவித்து வருகின்றனர். இதன் மூலம் ஜனநாயகப் படுகொலை செய்வோம் என்று தெரிவித்து வருகின்றனர்.

நாட்டின் ஜனநாயகத்தை, அரசியல் அமைப்பு சட்டத்தை, மதச்சார்பின்மையை அடியோடு குழிதோண்டி புதைப்போம் என்கின்றனர்.

இவைகளுக்கு எல்லாம் மூடுவிழா நடத்தி விட்டு, பாசிச ஹிட்லரின் பாணியில் தங்களது ஆட்சியை நடத்துவோம் என்று மறைமுகமாக கொக்கரித்து வருகின்றனர்.

இத்தகைய கெடுமதி கொண்ட, கொடுங்கோலர்களுடன் கை கோர்த்து நிற்கின்றனர். இங்கே உள்ள பகுத்தறிவு சிகரங்களாக அதிமுகவினர்.

இத்தகையவர்களை அடையாளம் கண்டு அப்புறப் படுத்தும் அரசியல் பணிகளை நாம் இடைவிடாது மேற்கொள்ள வேண்டும்.

நாட்டு மக்களை தற்கொலைக்குத் தள்ளும் பாஜகவையும், அதற்கு தூபம் போட்டு துணைபோகும் அதிமுகவையும் ஒரு சேர புறக்கணிக்க நாட்டு மக்களை ஆயத்தப்படுத்தும் பணியில் தொடர் முயற்சிகளை மேற்கொள்வோம்.

இடைவிடாது நமது கொள்கை ரீதியான அரசியல் பணிகளை, இலட்சியப் பணிகளை இம்மியளவும் சமரசமின்றி தொடர்ந்து மேற்கொள்வோம்.


**மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**

# மக்களின் விருப்பங்களை நிறைவேற்றத் தவறிய ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை

## நாடாளுமன்றத்தில் தோழர் பினாய் விஸ்வம் குற்றச்சாட்டு



**1998 ஆம் ஆண்டு ஜார்ஜ் சொரெஷ் எழுதிய, 'உலக முதலாளித்துவ நெருக்கடி' எனும் நூல் வெளியானது. அவர் ஆளும் வர்க்க சித்தாந்தப் பின்னணியில் நம்பிக்கை கொண்டிருப்பவர். முதலாளித்துவ நெருக்கடி குறித்து பலர் எழுதத் தொடங்கிய ஆரம்ப காலகட்டத்தில், பெரும் முதலீட்டாளரான இவர், அந்த நெருக்கடி பற்றி சிந்தித்துள்ளார். அந்த நெருக்கடி இப்போது அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்று பிப்.9ஆம் தேதி மாநிலங்களவையில் நடைபெற்ற ஒன்றிய நிதி நிலை அறிக்கை 2022-23 மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய தோழர் பினாய் விஸ்வம் குற்றம்சாட்டியுள்ளார்.**

இந்த விவாதத்தில் அவர் பேசியதாவது: பெரிதாகச் சாதித்து விட்டோம் என்று தம்பட்டம் அடிக்கும் ஒன்றிய அரசின் இந்த பட்ஜெட், நெருக்கடிகளை மூடி மறைப்பதற்கான ஒரு மோசமான முயற்சியாகும்.

இந்த நிதிநிலை அறிக்கை மக்களின் விருப்பங்களை நிறைவேற்றத் தவறிவிட்டது. இந்த நிதிநிலை அறிக்கை ஏழை மக்களை முற்றாக மறந்துவிட்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம். புதிய தாராளமய காலகட்டத்தின் தொடக்கத்தில் **(trickle down)** என்றொரு மாபெரும் தத்துவத்தை பற்றி நாம் கேள்விப்பட்டோம். ஆனால், இந்த நிதி நிலை அறிக்கை மேல்நோக்கிச் செல்லுதல் என்பதாக உள்ளது. இது ஏழைகளுக்கான நிதிநிலை அறிக்கை இல்லை என்பதோடு பெரும் செல்வந்தர்களின் நலன் காப்பதற்காகத் தயாரிக்கப்பட்டதாகும்.

இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயிகள், தொழிலாளர்கள், பெண்கள் நலன், சுகாதாரத்துறை மற்றும் குறைந்தபட்ச ஆதார விலை ஆகியவற்றுக்காக என்ன உள்ளது? எதுவும் குறிப்பிடப்படவில்லை.

நிதி ஒதுக்கீடும், மானியங்களும் குறைக்கப்பட்டுள்ளன. ஏழைகளின் நிலை பரிதாபகரமாக இருக்கிறது. நமது பிரதமர் ஏழை மக்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்கள் குறித்து மிக உயர்வாகப் பேசினார். ஆனால், அவர்களுக்கு இந்த நிதி நிலை அறிக்கையின் மூலம் எதுவும் கிடைக்கப்போவதில்லை. பெருந்தொற்று காலத்தில் நாம் கண்ணுற்ற பரிதாபகரமான நிலைமைகள் அனைத்திற்கும் இந்த அரசாங்கமே பொறுப்பாகும். லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் பணியிடங்களில் இருந்து பெயர்ந்து அவர்களின் ஊர்களுக்குச் சென்றனர். அதற்கும் பிரதமர் காங்கிரஸ் கட்சியைக் குறை கூறுகிறார். நான்கு மணி நேர அவகாசத்திற்குள்ளாக காங்கிரஸ் கட்சியா ஊரடங்கை நடைமுறைப்படுத்தியது? எங்கள் கட்சிக்கு காங்கிரஸ் கட்சி மீது ஏராளமான விமர்சனங்கள் உண்டு. அதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அழிவுகரமான, புதிய தாராளமய பொருளாதாரக் கொள்கையைத் தொடங்கி வைத்தது காங்கிரஸ் கட்சியாகும். ஆனால், பாஜகவும், பிரதமரும் தற்போது அந்தக் கொள்கைகளையே அவசர கதியில், அழிவுகரமான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நாம் பார்த்து வருகிறோம்.

இந்த அரசாங்கம் அவ்வப்போது விவேகானந்தரைப் பற்றி குறிப்பிடுகிறது. எனவே, நானும் அவரின் கருத்துக்கள் சில வற்றை மேற்கோள் காட்ட விழைகிறேன். ''பசியில் வாடும் மனிதனுக்கு மதக் கோட்பாடுகளும், போதனைகளும் ஒரு போதும் உணவாகாது. கடவுள் குறித்த போதனைகள் எவையும் அம்மனிதனது பசியைப் போக்கிடாது. அம்மனிதனுக்கு உண வளிக்கப்பட வேண்டும்.

ஊரடங்கின் மூலமாக இந்த அரசாங்கம் மக்களுக்கு உண வளிக்க மறுத்துவிட்டது. ஒட்டுமொத்த சோகமான சூழலுக்கும் அதுவே காரணமாகும். அவுரங்காபாத் நகர ரயில் தடங்களில் மக்கள் மாண்டதை இந்த அரசாங்கம் எவ்வாறு மறக்க முடியும்?

**பிரதமர் செல்வவளங்களை உருவாக்குபவர்கள் குறித்து உரக்கப் பேசுகிறார். அவர்களுக்கு அரசாங்கம் ஆதரவுக்கரம் நீட்டும் என்று உறுதியேற்கிறார். இந்த அரசாங்கத்தைப் பொருத்த மட்டில் செல்வ வளங்களை உருவாக்குபவர்கள் யார்? அதானி, அம்பானி, டாடா, பிர்லா போன்றவர்கள்தான் இந்த அரசாங்கத்தைப் பொருத்த வரையில் செல்வ வளங்களை உருவாக்குபவர்கள் ஆவர்.**

முன்னர், அரசாங்கத்தை டாடா, பிர்லா அரசாங்கம் என்று இடதுசாரிகள் விமர்சித்துள்ளனர். தற்போது, அம்பானி, அதானி அரசாங்கம் என்றாகி விட்டது. குறைந்த விலையில் ஏர் இந்தியா நிறுவனம் தாரை வார்க்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் சுரண்டும் வர்க்கத்தாரின் அரசாங்கம் ஆகும் என்பதில் துளியும் ஐயப்பாடு இல்லை.

உண்மையில் செல்வ வளங்களை உருவாக்குபவர்கள் யார்? விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் தான் செல்வ வளங்களை உருவாக்குபவர்கள். அவர்களை இந்த அரசாங்கம் மறந்து விட்டதுடன் சுரண்டுபவர்களின் நலன்களைப் பாதுகாத்து வருகிறது.

இந்த அரசாங்கத்தின் மோசமான நடவடிக்கைகளால் பொருளாதார நிலைத்தன்மை நிலைகுலைந்து இருக்கிறது. இந்த அரசாங்கத்தின் நிதிக் கொள்கை மூலம் பொருளாதார நிலைத்தன்மையைப் பாதுகாத்திட முடியாது.

ஆனால், நாட்டின் பொருளாதாரம் மீட்கப்பட வேண்டியது தற்போதைய அவசியத் தேவையாகும். பாஜக அரசாங்கத்தால் இந்த காரியத்தைச் சாதிக்க முடியாது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுதி யாக நம்புகிறது.

அவர்கள் லாபத்தைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

போப் பிரான்சிஸ் கூறியது, ஒட்டுமொத்த உலகத்துக்கும் இன்றைய சூழலில் மிகவும் முக்கியத்துவம் உடையதாக இருக்கிறது. நாம் அனைவரும் அவர் மீது மரியாதை கொண் டுள்ளோம். நமது பிரதமர் அவரை இந்தியாவிற்கு வருகை புரிய வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

அவரது இந்திய வரவை எதிர்நோக்கி நாம் அனைவரும் காத்துக் கொண்டிருக்கிறோம். போப் பிரான்சிஸ் ஒரு சமயம் கூறியதாவது: ''சந்தை மட்டுமே அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்து விட இயலாது. நாம் எவ்வளவுதான் இந்த புதிய தாராளமய கொள்கைகள் மீது நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் என்று கூறப்பட்டாலும், சவால்கள் எதுவாக இருப்பினும், புதிய தாராளமய கொள்கைகள் வழங்கும் தீர்வுகள் புதியனவாக இருப்பதில்லை.''

இறுதியாக நான் காரல் மார்க்சின் கருத்துக்களை மேற் கோள் காட்டுகிறேன்.

காரல் மார்க்ஸ் நிகழ்காலத்துக்கும், வருங்காலத்துக்குமான தத்துவஞானியாகத் திகழ்கிறார். இந்தப் பின்னணியில், நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இதுநாள் வரையில் மதித்துப் போற்றப்பட்ட ஒவ்வொரு தொழிலின் சிறப்பையும் முதலாளித்துவம் அழித்தொழித்து இருக்கிறது. மருத்துவர், வழக்குரைஞர், கவிஞர், அறிவியலாளர் ஆகியோரை தினக் கூலி தொழிலாளர்களாக மாற்றிவிட்டது.

இப்போது, இந்த அரசாங்கமும் அதையே செய்கிறது என்று நான் கூறுவேன். இவ்வாறு நாடாளுமன்ற மாநிலங்களவையில் தோழர் பினாய் விஸ்வம் பேசியுள்ளார்.

# கிரீசில் நடைபெற்ற போராட்டங்கள்

கடந்த 5ஆம் தேதி கிரீஸ் நாட்டின் துறைமுக நகரான தெசலோனிக்கியில் பிரமாண்டமான பாசிச எதிர்ப்பு பேரணி நடைபெற்றது. இந்த பாசிச எதிர்ப்பு பேரணியில் தொழிற்சங்கங்கள் மற்றும் மாணவர் அமைப்புகளைச் சார்ந்த ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். மத்திய மேசிடோனிய பெற்றோர்கள் கூட்டமைப்பு இந்தப் பேரணிக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்தப் பகுதியில் உள்ள மாணவ செயல்பாட்டாளர்கள் மீது பாசிச குழுக்கள் நடத்திய வன்முறை தாக்குதல்களுக்கு எதிரான ஒரு தீர்மானகரமான பதிலடியாக இந்தப் பேரணி அமைந்தது. அந்தப் பகுதியின் பெரும் முதலாளிகளின் ஆதரவு பெற்ற குழுக்களுடன் தொடர்புடைய இதே பாசிச குழு, கடந்த சில நாட்களுக்கு முன் 19 வயது நிரம்பிய அப்பாவி இளைஞர் ஒருவரை கொலை செய்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தாங்கள் வாழும் பகுதிகள் மற்றும் பள்ளிகளில் பாசிச சக்திகள் கட்டவிழ்த்து விடும் கொடூரமான வன்முறைகளைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டோம் என்ற வலிமையான செய்தியை இப்பேரணியில் கலந்து கொண்ட மக்கள் வெளிப்படுத்தினர்.


## பாசிச எதிர்ப்பு பேரணி

**24 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டம்**

கோஸ்கோ தொழிலாளர்களின் 24 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டம் நிர்வாகத்தின் அச்சுறுத்தல், அடக்குமுறைகளைக் கடந்து பைரியாஸ் துறைமுகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது.

தங்களின் வேலை நிறுத்த உரிமைகளைப் பாதுகாக்கும் உறுதிப்பாடு மிக்க தொழிலாளர்களின் போராட்டத்திற்கு துறைமுகத்தில் உள்ள இதரத் துறைகள் சார்ந்த தொழிலாளர் தோழர்களும் ஆதரவு தெரிவித்தனர்.

தங்களது வேலை நேரம் முடிந்த பிறகு வீடு திரும்புவதாக இருந்த தொழிலாளர்களும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டது உத்வேகமூட்டுவதாக அமைந்தது.




**விவசாயிகள் போராட்டம்**

கிரீஸ் நாட்டில் விவசாயிகள் போராட்டத்தின் கேந்திரமான பகுதியாக இருக்கும் தெசல்லி பகுதியின் நிக்கையா சந்திப்பில் கடந்த 4ஆம் தேதியிலிருந்து சாலை மறியல் நடைபெற்று வருகிறது. பொறுமையின் எல்லையைக் கடந்து விட்ட விவசாயிகள், சாலை மறியல் மட்டுமின்றி பல்வேறு விதமான போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டத்தின் துவக்கத்தில் இருந்தே போலீஸ் படையைக் கொண்டு விவசாயிகளின் போராட்டத்தை நசுக்கி விட வேண்டும் என்று அந்நாட்டு அரசாங்கம் முயன்று வருகிறது. ஆனால், விவசாயிகளின் உறுதியான நிலைப்பாடு ஆதிக்க சக்திகளையும் பின்வாங்கச் செய்துள்ளது.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 84 இதழ் 46

# அமாவாசையின் ஆசை

தமிழ்நாட்டு நகர்புற உள்ளாட்சிகளுக்கான தேர்தல் நிறைவுறும் நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் வாக்காளர்களுக்கு மாநிலத்தின் உரிமைகள், மொழி, மரபுகள் மீதுபிடிப்பு உண்டு. மதரீதியாக பகைமை இல்லை; இயல்பான நட்புறவும் சகிப்புத்தன்மையும், தனிமனிதத் தவறுகளை, மதத்தின் தவறுகளாக எடுத்துக் கொள்ள மறுக்கும் மேன்மையும் இருக்கின்றன. அதனால்தான் பாஜகவும் பல்வேறு நாமங்களில் திரியும் அதன் பரிவாரங்களும்,

ஒன்றிய அரசின் அதிகார பலத்தால் கிடைத்துள்ள அனைத்துத் துணைகளோடு, எவ்வளவு ஊதிப் பார்த்தும் மதக்கலவரத்தை இங்கு பற்றவைக்க முடியவில்லை.

சட்டமன்றத் தேர்தல்கள் முடிந்த பின்பு, பாஜகவுடன் கூட்டணி வைத்ததால்தான் வெற்றி பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது என அதிமுக தலைவர்கள் பகிரங்கமாகவே சொன்னார்கள். உள்ளாட்சித் தேர்தலிலும் கணிசமான இடங்களை பாஜகவுக்கு தந்துவிட்டு, அதனுடன் கூட்டணி சேர்ந்ததற்கான பாவச் சுமையையும் தூக்கித் திரிய வேண்டியதில்லை என அதிமுக முடிவுக்கு வந்திருந்தால் அது சரியானதே.

அஇஅதிமுகவுடன் உள்ளாட்சித் தேர்தலில் மட்டும் கூட்டணி முறிந்தது; ஆனால் உறவு தொடர்கிறது என்று பாஜக விநயமாக அறிவித்தது. தான் நட்ட விஷச்செடியின் வேர், தமிழ் மண்ணில் இறங்கி இருக்கிறதா என்பதை பார்த்துக் கொள்ள பாஜகவுக்கு உள்ளாட்சித் தேர்தலில் தனித்து போட்டியிடுவது தேவைப்படுகிறது. அதேநேரத்தில் நாடாளுமன்ற சட்டமன்றங்களில் இந்த பரீட்சையை நடத்த முடியாது என்பதால் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி தொடரும் என்று சொல்லிவிட்டார்கள்.

உள்ளாட்சி பரப்புரைக்கு போன முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, திமுக ஆட்சி இன்னும் 27 அமாவாசைகளுக்கு நீடிக்காது என்று சொல்லியிருக்கிறார். அரசியல் வாழ்வில் 'அமாவாசை' என்ற பெயருக்கு தமிழ்நாட்டில் தனியாக ஒரு பொருள் இருக்கிறது.

அது லேசாக மறையத் தொடங்கிய போது மறுபடி நினைவூட்டி இருக்கிறார்.

ஒரே நாடு ஒரே தேர்தல் நல்லதாம். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் எல்லா மாநில அரசுகளையும் கலைத்து விட்டு சட்டப் பேரவைத் தேர்தலையும் சேர்த்து வைப்பார்களாம், இப்போது நடந்து கொண்டிருக்கும் ஐந்து மாநிலத் தேர்தல்கள் உட்பட!

மனிதருக்கு எவ்வளவு பேராசை? "குஜராத் வளர்ச்சி என்று விளம்பரப்படுத்துவது ஒரு மாயத் தோற்றம். மோடியா லேடியா என்று பார்ப்போம்" என்று சவால் விட்டவர் ஜெயலலிதா. விமர்சனங்கள் பல இருந்தாலும் மாநில உரிமைகளை பாதுகாப்பதில் அவரும் உறுதி காட்டினார். அவர் பெயரைச் சொல்லிக்கொண்டே, கூட்டணி முறிந்தும்கூட, பாஜகவுக்கு அடிமைச் சேவகம் செய்து கொண்டிருப்பதை தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருப்பதை எடப்பாடி மறந்துவிட்டார். ஆசை வெட்கம் அறியாது!

இன்னும் ஒருபடி மேலே போய் மேற்குவங்கத்தில் நடந்ததை போல தமிழ்நாட்டு ஆளுநரை கொண்டு தமிழ்நாட்டின் சட்டப் பேரவையும் முடக்கி விடுவோம் என்று பேசவும் துணிந்து விட்டார். இதெல்லாம் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் பேசும் பேச்சா? மேற்கு வங்க மாநில அரசு கேட்டுக் கொண்டதன் அடிப்படையில், சட்டசபை கூட்டத்தை அடுத்து கூடும் நாள் வரை தள்ளிவைத்து உத்தரவிட்டுள்ளேன். வேறு எதுவும் இல்லை என்று மேற்கு வங்க ஆளுநர் பதில் கூறியிருக்கிறார்.

அவ்வாறெல்லாம் தமிழ்நாட்டில் ஆட்சியை முடக்கி வைத்தால், அல்லது கலைத்து விட்டால் மீண்டும் அதிமுக ஆட்சிக்கு வந்து விடும் என்று பேசி கூட்டத்தில், "பெய்டு" கைதட்டலைப் பெறலாம். ஆனால் மக்களின் மனதை தொட முடியுமா?

ஐந்து மாநிலத் தேர்தல்களில் இந்து மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர் என சமூகத்தை இரண்டாக பிரித்து வாக்குகளை வாங்க தவியாய் தவிக்கிறது பாஜக. நாங்கள் வெற்றி பெற்றால் முஸ்லிம்களை தலையில் குல்லாய் அணிய விடமாட்டோம், திலகம் வைக்க வேண்டும் என ஆணையிடுவோம் என்கிறார் ஒரு எம்எல்ஏ. ராணுவ வீரர்கள் மீது காஷ்மீரில் யாரேனும் கல்லெறிந்தால் அனுமதி தேவையில்லை 24 மணிநேரமும் சுட்டுக் கொல்ல உத்தரவிட்டிருக்கிறோம் என்று மார் தட்டுகிறார் ஒரு முன்னாள் மந்திரி.

"நான் இந்த வீதிகளில் நிராதரவாய் அலைந்து கொண்டிருந்த போது எனக்கு உணவு ஊட்டியது பஞ்சாப் தான். அதை ஒரு நாளும் மறவேன்" என்று புதுத் திரைக்கதை எழுதி குடம் குடமாய் கண்ணீர் விட்டு கதறி அழுகிறார் மோடி.

எடப்பாடி கற்றுக் கொள்ளவேண்டும். தமிழ்நாட்டின் 99 சதவீத மக்களால் எதிர்க்கப்படும் மோடியின் கட்சியையும், அதன் அராஜக நடவடிக்கைகளையும் புகழ்ந்து பேசினால் தமிழர்களிடமிருந்து அந்நியப்படுவார்கள்!

-சி. ஆதிகேசவன்

# பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்

## ஜெஎன்யு பல்கலை துணைவேந்தராக ஆர்எஸ்எஸ் ஆ[மாம்]சாமி நியமனம்






ஒன்றிய அரசு ஆர்எஸ்எஸ் அமைப்பின் நபரைப் பெருமைமிகு ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத் துணை வேந்தராக நியமித்து பெரும் அழிவைச் செய்து விட்டது. மதசார்பற்ற கல்வி நிறுவனத்தில் தனது பாசிச, வகுப்புவாத நிகழ்ச்சிநிரல் திட்டத்தைத் திணித்தது ஆர்எஸ்எஸ் பாஜக அரசின் மற்றுமொரு முயற்சியாகும்.

அரசின் அறிவற்ற முதிர்ச்சியின்மையை வெளிச்சமிட்டுக் காட்டுவதைத் தவிர இது வேறில்லை. ஜெஎன்யு துணைவேந்தராகச் சாந்திஸ்ரீ துளிப்புடி பண்டிட் அவர்களைத் தேர்ந்தெடுத்ததை அறிந்த கற்றறிந்த அறிவாளர்கள் "தற்குறித்தனமான நபர்களின் நியமனம் நமது இளைஞர்களின் எதிர்காலத்தை பாழாக்கி அழித்து விடும்" என்று கடுமையாக விமர்சனம் செய்தனர்.

ஜெஎன்யு புதிய துணைவேந்தர் வெளியிட்ட பத்திரிக்கை செய்திக் குறிப்பு, ஏராளமாய் அள்ளித் தெளித்த இலக்கணப் பிழைகள் நிறைந்து, அவரது அறிவிலித்தனத்தை வெளிச்சமிட்டுக் காட்டியது. அவரது முந்தைய ட்விட்டர் பதிவுகள் வெறுப்பு உமிழும் பதிவுகள் நிறைந்தது மட்டுமல்ல, அவர் முன்பு நிர்வாகியாக இருந்தபோது ஊழல் குற்றச்சாட்டு வரலாறும் அவருக்கு உண்டு எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெஎன்யு துணைவேந்தராக எம் ஜெகதீஷ்குமாரின் குழப்பம் நிறைந்த நீண்ட பதவி காலத்திற்குப் பிறகு அந்த முதன்மைப் பல்கலைக்கழக எதிர்காலத்தில் அமைதி திரும்பும் என்ற நம்பிக்கையைச் சர்ச்சைக்குரிய நபர் பண்டிட்டின் நியமனம் பொய்யாக்கி விட்டது.

பண்டிட் தற்போது புனா சாவித்திரிபாய் புலே பல்கலைக் கழகத்தில் அரசியல் மற்றும் பொது நிர்வாகப் பேராசியராகவும், எம்.பில் ஆய்வு மாணவர் வழிகாட்டியாகவும் உள்ளார். அப்பல்கலைக் கழகத்தின் தகவல் தொடர்பு படிப்பு துறையில் வெகுஜன ஊடகங்கள் ஒலிபரப்பு, ஊடக ஆய்வு, அரசியல் மற்றும் தகவல் தொடர்பு பாடங்களை அவர் கற்பிக்கிறார்.

இணைய வாசலின் மற்றொரு தகவல் பண்டிட் ஆர்எஸ்எஸ் அமைப்புடன் நெருக்கத்தில் இருப்பவராகக் கூறுகிறது. அதையும் தாண்டி கடந்த காலத்தில் சமூக ஊடகத்தில் அவர், சந்தேகத்திற்கு இடமின்றி இனப்படுகொலை நடத்த அழைப்பு விடுத்ததாகக் குற்றம் சாட்டப்படுவது அவரைத் தனித்துக் காட்டுகிறது. உதாரணத்திற்கு ட்விட்டரில் பண்டிட் குடியுரிமை செயற்பாட்டாளர்களைத் துன்புறுத்தி பகிஷ்கரிக்க வேண்டும் என பதிவிட்டார். அவர்களைப் 'புத்தி சுவாதினமற்ற ஜிகாதிகள்' என்று முத்திரை குத்தி அவர்களைச் "சீனாவின் பாணி"யில் நடத்த வேண்டும் எனவும் ஆலோசனை கூறினார். சீன பாணி என அவர் குறிப்பிடுவது கிழக்கு சீனாவில் இருந்ததாகச் சொல்லப்படும் தடுப்பு முகாம்களாக இருக்கலாம்.

அந்த ட்விட்டர் ஹேண்டில் சரிபார்க்கப்பட்ட ஒன்று அல்ல என்றபோதும் பண்டிட் அந்த வெறுப்பு நிறைந்த டிவிட் பதிவுகளுக்கு எதிராக ஒருபோதும், புகார் செய்ததும் இல்லை, அவற்றை மறுத்ததும் இல்லை.

பிப்ரவரி 7ம் தேதி அவர் துணைவேந்தராக நியமிக்கப்பட்ட செய்தி பொதுவெளியில் வெளியானதும் ட்விட்டரில் அவரது சர்ச்சைக்குரிய பதிவுகளுக்காக அவரைச் சங்கடத்தில் ஆழ்த்தி விட்டனர். அவர் முன்பு இந்தியக் கிருஸ்துவர்களை "ஒரு மூட்டை அரிசிக்காக மதம் மாறியவர்கள்" எனச் சென்ற ஆண்டு ட்விட்டரில் கொச்சையாகப் பதிவிட்டதைத் திரிணமுல் காங்கிரஸ் தலைவர் சாகேத் கோகலே குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டினார்.

பண்டிட் 'ஹேண்டிலி'ன் பல பழைய ட்விட்டர் பதிவுகளின் திரை புகைப்படங்களை முகமது ஜுபைர் மீண்டும் எடுத்துப் பதிவிட்டுள்ளார்.

சென்ற ஆண்டு மே மாதத்தில் பண்டிட் மற்றொரு ட்விட்டர் பதிவில் விவசாயத் தலைவர்கள் யோகேந்திர யாதவ் மற்றும் ராகேஷ் திகாயத் இருவரையும் குறிப்பாகச் சுட்டிக் காட்டுவதைப் போல அவர்களை "ஒட்டுண்ணி இடைத் தரகர்கள்" மற்றும் "பொய்யர்கள் என்று வர்ணித்திருந்தார்.

கல்வி வளாகத்துள் அமைப்பு ரீதியாக ஒன்று திரளும் மாணவர் குழுகள் பற்றி புதிய துணைவேந்தருக்கும் இருக்கும் வெறுப்பு, குறிப்பாக ஜெஎன்யு சம்பந்தமாக, மிகவும் கவலை அளிப்பதாகும். 2020ம் ஆண்டின் தொடக்கத்தில் கல்விக் கட்டண உயர்வுக்கு எதிரான இயக்கங்கள் நடைபெற்றபோது, பாஜக ஐடி செல் தலைவர் அமித் மாள்வியாவுக்கு எதிர்வினையாகப் பண்டிட் ஒரு ட்விட்டர் பதிவில் "ஜெஎன்யுவிலிருந்து இழந்தார்கள். இந்தத் தீவிரவாத நக்சல் குழுக்களை வளாகத்தில் தடை செய்ய வேண்டும். ஜாமியா மற்றும் செயின்ட் ஸ்டீபன்ஸ் போன்ற மதவாத கல்வி அமைப்புகளுக்கு நிதியளிப்பதைத் தடுக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இவை குறித்தெல்லாம் சமூக ஊடகத்தில் எதிர்ப்பு கிளம்பியதும் 'சரிபார்க்கப்படாத' அவரது ட்விட்டர் கணக்கு நீக்கப்பட்டது. கட்டுரை எழுதப்படும் இந்த நேரம்வரை ட்விட்டர் பதிவுகள் அல்லது சமூக ஊடகத்தில் வலம் வரும் அவரது பதிவின் ஸ்கீரின் ஷாட்களிலிருந்து அவர் தன்னைத் துண்டித்துக் கொண்டதாக அதிகாரபூர்வமான மறுப்பு அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை.

**சங் பரிவார் கும்பலின் தகுதிச்சான்றுகளோடு உள்ள கல்வியாளர்களை மத்திய கல்வி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பில் நியமிக்கும் ஒன்றிய அரசின் அணுகுமுறை, பண்டிட் விஷயத்திலும் --அவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் இருந்ததை மீறி - ஒரு தலைபட்ச சார்புடையதாகவே உள்ளது.**

புனா பல்கலைக்கழகத்தின் சர்வதேச மாணவர்கள் மையத்தின் இயக்குனராக பண்டிட் இருந்தபோது நடைபெற்ற முறைகேட்டை மற்றுமொரு போர்ட்டல் செய்தி முகமை 2011ல் வெளியிட்டுள்ளது. 2002 முதல் 2007வரை சுமார் 1800கும் மேற்பட்ட இந்திய மாணவர்களுக்குப் பல்வேறு தொழில்நுட்பப் பாடப் பிரிவு களில் அனுமதி வழங்கப்பட்டது. அந்த இடங்கள் வெளிநாட்டுவாழ் 'இந்தியப் பூர்வீக நபர்க'ளுக்காக இடஒதுக்கீடு செய்யப்பட்டவையாகும்.

ஜெஎன்யு முன்னாள் மாணவரான பண்டிட் தவிர அப்பதவிக்கு வேறுஇருவர் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. ஒருவர், ஸ்கூல் ஆப் இன்டர்நேஷனல் ஸ்டடீஸ் கல்வி நிறுவனத்தின் ஐரோப்பிய படிப்புகளுக்கான மையத்தின் பேராசிரியர் குல்ஷன்சச்தேவா; புதுடெல்லியில் தலைமையகமாகக் கொண்டு செயல்படும் இன்டர் யுனிவர்சிட்டி அக்ஸிலரேட்டர் மையத்தின் (IUAC) இயக்குநர் அவினாஷ் சந்திரா பாண்டே மற்றொருவர். இருந்தபோதிலும் பண்டிட்டின் (ஆர்எஸ்எஸ்) தத்துவச் சார்பு மிக கனமுடையதாக அவர் தேர்வு செய்யப்படுவதற்குச் சாதகமான காரணமாயிற்று.

இன்று இந்தியாவின் கல்வி நிறுவனங்கள் பெரும் தாக்குதல் ஆபத்தைச் சந்திக்கின்றன.

நன்றி: நியூஏஜ், தமிழில்: **நீலகண்டன்**



எஸ். தோதாத்ரி

தத்துவார்த்தம் 17


# வரலாற்றுப் பொருள்முதல்வாதம் 5

**சமுதாயத்தை இயக்கும் சக்திகள் யாவை? மார்க்சியம் இதற்கு மூன்று சக்திகளைக் காட்டுகிறது. 1) உற்பத்தி கருவிகள், 2) உற்பத்தி உறவுகள், 3) வர்க்கப் போராட்டம். உற்பத்தி கருவிகள் என்பன இல்லாவிட்டால் சமூக வளர்ச்சி என்பதே இருக்க முடியாது. கருவியின் முக்கியத்தை வள்ளுவர் அவரது குறளில் மிகத் தெளிவாக கூறுகிறார்.**

**"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை."**

ஏரின் பின்னால் உலகம் செல்கிறது என்று வள்ளுவர் கூறுகிறார்.

## சமுதாயத்தை இயக்கும் சக்திகள்



வேலுக்கும், வில்லுக்கும் நமது புராணங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. இவை வேட்டைக்குரிய முக்கியமான கருவிகளாகும். இவை இல்லாவிட்டால் வேட்டையாடுவது சிரமம். இன்றைக்கு கணினி, கைபேசி ஆகியன வந்துவிட்டன. இக்கருவிகள் இல்லாத இன்றைய சமூக வாழ்வை கற்பனை செய்ய முடியாது.

கருவிகள் எவ்வாறு சமூக முன்னேற்றத்திற்கு துணையாக உள்ளன? பழங்காலத்திலிருந்தே மனிதன் கருவிகளை கண்டுபிடித்து கொண்டே இருக்கிறான். பழைய காலத்தில் கற்கருவிகளைப் பயன்படுத்தினான். இதன் முன்னேற்றம் மெதுவாகவே இடம் பெற்றது. இதன் காரணமாக நீண்ட காலமாக சமுதாயம் முன்னேறாமலேயே இருந்தது. பழைய கற்காலத்திலிருந்து புதிய கற்காலம் வரும் பொழுது சமுதாயம் முன்னேறியது. இதன்பின்னர் தாமிரம் பயன்படுத்தப்பட்ட பொழுது இன்னும் ஒருபடி முன்னேறியது. இரும்பு பயன்பாட்டிற்கு வந்த பின்னர் சற்று விரைவான முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால், உற்பத்திக் கருவிகள் வேகமாக கண்டுபிடிக்கப்பட்ட காலம் முதலாளித்துவ சமூகம் தோன்றிய காலம். இது சமூக மாறுதலை விரைவுபடுத்தியது. இக்கருவிகள் புதிதாக வரவர வாழ்க்கை முறை மாறியது. புதிய பொருள்கள் புழக்கத்திற்கு வந்தன.

மார்க்சின் கருத்துப்படி இந்த உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி உற்பத்தி உறவுகளும் அமையும். இந்த உற்பத்தி உறவுகள் மிக முக்கியமானவை.

வரலாற்றை முன்னெடுத்துச் செல்லும் சக்திகள் இந்த உற்பத்தி உறவுகள் ஆகும். அதனால்தான் மார்க்ஸ் அவருடைய "கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில்" இதுவரையுள்ள வரலாறு எல்லாம் வர்க்கப் போராட்டங்களின் வரலாறு என்று கூறுகிறார். மிகப் பழங்காலத்தில் வர்க்கங்கள் இல்லை. எல்லோரும் உழைத்தார்கள். உணவை பகிர்ந்துண்டு வாழ்ந்தார்கள்.

வர்க்கங்கள் தோன்றிய பின்னர் போரும், பூசலும் மிகுந்தன. இந்த வர்க்கம் என்பது ஒரு பொருளாதார தன்மை உள்ளது. கருவிகள் யாருக்குச் சொந்தம் என்ற நிலை வரும் பொழுது வர்க்கம் தோன்றுகிறது. கருவிகளின் சொந்தக்காரர்கள் ஆளும் வர்க்கமாகவும், கருவிகள் இல்லாதவர்கள் உழைக்கும் வர்க்கமாகவும் மாறுகின்றனர். இப்பொழுது புராதன காலத்தில் இருந்த நேச உறவு என்பது மறைகிறது. பகைமை உணர்வு என்பது தோன்றுகிறது. இந்த உணர்வுகளில் முரண்பட்டனர். இதன் காரணமாக இவை ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்கின்றன. வெற்றி பெற்ற வர்க்கம் தோல்வியடைந்ததை அடக்கி ஆள்கிறது. இத்தகைய உறவை ஆண்டான் – அடிமை, முதலாளி – தொழிலாளி என்ற இடங்களில் காணலாம்.

**இந்த வர்க்கப் போராட்டம் என்பதற்கு இரு தன்மைகள் உண்டு. சில சமயங்களில் இது வெளிப்படையாகத் தெரியும். பிரஞ்சு புரட்சியும், சோவியத் புரட்சியும் இதற்கு உதாரணங்கள். பெரும்பாலான சமயங்களில் உள்ளார்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கும். அதில் ஈடுபடுபவர்களுக்கு, அவர்கள் செய்வது தெரியாமலே இருக்கும்.**

உதாரணமாக இங்கிலாந்தில் பட்டறை முறை என்பது தொழிற் புரட்சிக்கு முன்பு தோன்றியது. இந்த முறையில் பட்டறை உரிமையாளர் கூலிக்கு வேலை ஆட்களை வைத்துக் கொண்டார். இந்த கூலி உழைப்பாளிகள்தாம் பாட்டாளிகளாக மாறினர். பட்டறை உரிமையாளர்கள் பூர்ஷ்வாக்களாக மாறினர். இவர்கள் இருவரும் பிரபுத்துவ எதிர்ப்பு தன்மை உள்ளவர்கள். இது ஒரு மாறுதலைக் கொண்டு வந்தது.

பண்டைக்காலத்தில் பண்ணை அடிமைகள் இருந்தனர். இந்த பண்ணையடிமைகள் முதலில் அமைதியாக இருந்தனர். கருவிகள் முன்னேறி உற்பத்தி அதிகமான காலத்தில் உற்பத்திமுறை அதற்கு தடையாக இருந்தது. இதன் விளைவு அடிமைகள் கலகம் ஏற்பட்டது. ஸ்பார்டகஸ் என்பவன் தலைமையில் ரோம சாம்ராஜ்ஜியத்தில் இடம்பெற்ற கலகம் ஒரு சமுதாய மாறுதலுக்கு வித்திட்டது. நம் நாட்டிலும் இத்தகைய கலகங்கள் இடம்பெற்றதை வரலாற்று ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். அதில் ஒன்று நந்தன் செய்த கலகம். இது மதம் என்ற போர்வையில் இடம் பெற்ற ஒன்று ஆகும். இது போன்ற பல வர்க்கப் போராட்டங்கள் சமுதாயத்தை ஒரு கட்டத்தில் இருந்து அடுத்த கட்டத்திற்கு நகர்த்துகின்றன. வரலாற்றில் இடம்பெற்ற பல போர்கள் வர்க்கப் போராட்டத்தின் விளைவாகும். முதல் உலகப்போர் முதலாளித்துவ நாடுகளின் உட் போராட்டமாகும். காலனிகளைப் பிடிப்பதற்காக இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளிடையே இடம்பெற்ற போராட்டம் ஆகும் அது. இது போன்ற பல நிகழ்வுகள் வர்க்கப் போராட்டத்தின் உந்துதலால் இடம்பெற்றது எனலாம். அதனால்தான் மார்க்சியவாதிகள் உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகள், வர்க்கப் போராட்டம் ஆகியவற்றை வரலாற்றை இயக்கும் சக்திகளாகக் காண்கின்றனர்.

தொடர்புக்கு: **98947 83657**

# வடிகால் மராமத்து பணிகளை ஊழல், முறைகேடின்றி செயல்படுத்திடுக

## முதல்வருக்கு பி.எஸ்.மாசிலாமணி வேண்டுகோள்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளதாவது:

பொதுப்பணித்துறை (நீர்வளம்) மூலம் செயல்படுத்தப்படும் பாசன வடிகால் வாய்க்கால்களை தூர்வாரும் பணிகள் பெயரளவிற்கு தான் கடந்த காலங்களில் நடந்து வருகிறது. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் செலவிடப்படும் பலநூறு கோடி ரூபாய்களில் உரிய பணிகள் செய்யப்படாமல் பங்கு போடப்படுகிறது.

கடந்த 30 ஆண்டுகளில் குடிமராமத்து பணிகளுக்காக ஒதுக்கீடு செய்த தொகையை கொண்டு புதியதாகவே இந்த பாசன வடிகால் கட்டுமானங்களை அமைத்து இருக்கலாம். பொதுப்பணித்துறையின் மாநில தலைமை திட்டமிட்டு தவறிழைக்கவே, ஒவ்வொரு ஆண்டும் இப்பணிகளுக்கான முன்மொழிவை ஏப்ரல், மே மாதங்களில் தான் உரிய நிதி ஒதுக்கீடு பெற வேண்டி மாநில அரசுக்கு அனுப்பி வைக்கும். ஒரு மாதம் கடந்துதான் அனுமதி வரும்.

பின் பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்தக்காரர்களுக்கும் ஆளும் அரசியல்வாதிகளுக்கும் கொடுக்கப்படும். அப்போது ஜூன், ஜூலை மாதங்களாகிவிடும். பணிகள் பெயரளவுக்கு நடந்து வரும் போதே மேட்டூர் அணை திறக்கப்பட்டு தண்ணீர் வந்துவிடும். இத்துடன் பணிகள் முடிந்ததாக பில் போடப்பட்டு கமிஷன் பங்கு போடப்படும். எனவே தாங்கள் இந்த நிலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

ஜனவரி இறுதியில் மேட்டூர் அணை மூடப்படுவதால் ஏப்ரல் மாத இறுதிக்குள் தூர்வாரும் பணிகள் அனைத்தையும் செய்து முடிக்கும் நிலையில் இதற்கான அரசின் முன் கட்ட பணிகளை முடித்திட வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் முன்பு முற்றுகை போராட்டத்தை நடத்தியது. ஆனாலும் இதில் மாறுதல் இல்லை. எனவே, மார்ச்மாதத்திற்குள் இந்த திட்டத்திற்கான அரசின் மற்றும் துறையின் வழிமுறைகளை முடித்து, நிதிஒதுக்கீடுகளை பெற்று, ஏப்ரல் மாதத்திற்குள் இப்பணிகளை முடித்திடும் நிலையிலான உத்தரவை பிறப்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலும் வட்டார அளவில் விவசாயிகளின் கூட்டத்தை நடத்தி முன்னுரிமை அடிப்படையில் அத்தியாவசிய பணிகளை தேர்வு செய்து அதை நிறைவேற்றிட வேண்டும். திட்ட மதிப்பீடு தொகை மற்றும் இதரவிபரங்களை கொண்ட பெயர்ப்பலகை ஒவ்வொரு பணிகளிலும் ஆங் காங்கு வைத்திட வேண்டும்.

இப்படியான நிலையில் பணிகள் முறையாக நடந்தால், வெள்ள பாதிப்பு குறையும், நில நீர்மட்டம் உயரும், வேளாண் உற்பத்தி உயரும், அரசின் நிதி விரயம் தடுக்கப்படும்.

இவ்வாறு மனுவில் கூறியுள்ளார்.

# ஆவடி மாநகராட்சி 25 வது வார்டில் வாக்கு சேகரிப்பு




ஆவடி மாநகராட்சி 25 வது வார்டில் போட்டியிடும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் எஸ்.மயில்வாகனன் அவர்களை ஆதரித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.லெனின், மூத்த பத்திரிக்கையாளரும், ஜனசக்தி மேலாளருமான இளசை கணேசன் ஆகியோர் பிப். 15 அன்று மாலை 4.00 மணிமுதல் 8.30 மணிவரை வைஷ்ணவி நகர் பேருந்து நிலையம், 1வது தெரு, 2வது தெரு, 8வது தெரு சந்திப்பு மற்றும் 60 அடிரோடு ஆகிய இடங்களில் பிரச்சாரத்தில் ஈடுபட்டு கதிர் அரிவாள் சின்னத்தில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



-நீ.சு.பெருமாள்



**இரண்டு வரிகளுக்குள் மூன்று நெறிகளைச் சொல்லி இந்த உலகை அளந்த திருவள்ளுவர் சாமியார்களை கூடாஒழுக்கம் அதிகாரத்தில் அறிமுகம் செய்கிறார்.**

**நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்**

மனமாரத் துறவு கொள்ளாது, துறவிகள் போல் நடித்து ஏமாற்றி வாழ்பவர்கள் இரக்கமற்ற கொடியவர்கள்.அவர்கள் எவரையும் விடக் கொடியவர்கள் என்கிறார் தமிழ்முனி வள்ளுவர்.

ஆம்... அந்த இரக்கமற்ற கொடியவர்கள் அண்மையில் உத்தரகாண்ட் மாநிலம் ஹரித்வாரில் இந்துமத சாமியார்கள்



# கூச்சலிடும் சாமியார்கள்

என்கிற பெயரில் கூடி மாநாடு நடத்தியுள்ளனர். இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற சாமியார்கள் சிலரின் பேச்சு அனைவரையும் திகைக்க வைத்துள்ளது.

இந்து ரக்சா சேனா அமைப்பின் தலைவர் பிரபோதானந்த் கிரி, பாஜக தலைவர்கள் அஸ்வினி உபாத்யாய், உதிதா தியாகி ஆகியோர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

“இந்து மதம் அழிகிறது. அண்டை நாடுகளில் இந்துக்கள் விரட்டப்படுகிறார்கள். நம்முடைய நாட்டிலும் இந்துக்களுக்கு இதே நிலைதான்.

**நாம் இப்போதே ஆயுதம் தூக்க வேண்டும். நாம்தான் தாக்க வேண்டும், கொல்ல வேண்டும், இல்லையென்றால் நாம் கொல்லப்படுவோம் என்று இந்த மாநாட்டில் பங்கேற்ற சாமியார்கள் மத வன்முறையை தூண்டும் வகையில் பேசியிருக்கின்றனர்.**

இந்த சாமியார்கள் கூட்டம் சர்ச்சைக்குரிய வகையில் பேசியது தொடர்பாக நீதித்துறை தலையிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணாவுக்கு, உச்ச நீதிமன்றத்தின் 76 வழக்கறிஞர்கள் கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளனர்.

இதே போல இந்த சாமியார்கள் மாநாட்டினைக் கண்டித்தும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியும் ஐந்து முன்னாள் ராணுவ உயர்அதிகாரிகள், கடிதம் ஒன்றினை எழுதி குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் மற்றும் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் இராணுவ அதிகாரிகளின் கவலை வெளிப்பட்டிருக்கிறது. சாமியார்களின் பேச்சு நாட்டிற்குள் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மீறுவதாக உள்ளது. இது உள்நாட்டு பாதுகாப்புக்கு மட்டுமல்ல, நம் தேசத்திற்கு எதிரான வெளிநாட்டு சக்திகளையும் ஊக்குவிக்கும் செயலாக அமையும். இந்தச் செயல் என்பது ராணுவம், காவல் துறை உள்ளிட்ட அனைவரின் ஒற்றுமையையும் சீர் குலைக்கும் என அந்த கடிதம் எச்சரிக்கை செய்துள்ளது.

விவேகானந்தரும் காவிகட்டிய சாமியாராகத்தான் உலவினார். இவர் கட்டிக் கொண்ட காவியால் காவிக்கான பெருமை உலகெங்கும் பரவியது...

ஆனால் இன்று இந்துமதத்தின் பெயரால் சாமியார்கள் சிலர் ஆயுதமேந்தி சக மனிதர்களைக் கொல்வோம் என்று சூளுரைக்கிறார்கள்...

புகழ்பெற்ற சிகாகோ உரைக்குப் பிறகு இறுதியாக அவர் அமெரிக்க மண்ணில் இருந்து ஒரு கருத்தினை பதிவு செய்தார்.

உலகளாவிய மதம் கிறித்தவ மதம் தானே என்று அங்கிருந்த பத்திரிகையாளர்கள் கேட்டபோது “இல்லை... மதங்களின் நல்லிணக்கமே உலகளாவிய மதம் என்று சொல்வேன் என்றார்”

அது மட்டுமல்ல “எல்லா மதங்களையும் சகிப்புத்தன்மையோடு அணுகுவோம்...என்று சொல்வதைக் கூட நான் விரும்பவில்லை. காரணம் எல்லா மதங்களையும் அவற்றின் கோட்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளும் பண்புகள் வளர வேண்டும். அதுதான் உண்மையான ஆன்மீகமாக கருதுகிறேன்

எல்லா மதங்களையும் வழிபாட்டு முறைகளையும் படைத்தவன் இறைவன் என்றால் அந்த இறைவனுக்குத் தெரியாதா தான் படைத்த மதங்களையும் வழிபாட்டு முறைகளையும் காப்பாற்றிக்கொள்ள ஏன் இந்த மனிதக் கூட்டம் மதங்களின் பெயரால் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு சாகிறது”எனக் கேட்டார்.

“ நோயாளிகளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய், பசியால் வாடுபவனுக்கு உணவு கொடு அறியாமையில் உள்ளவனுக்கு கல்வி கொடு இதுதான் உண்மையான வழிபாடு“ என்றார்.

மேற்கு வங்கத்தில் தோன்றிய இளம் துறவி அவர். 39 வயது மட்டுமே இந்த மண்ணில் உலவியவர். வாழ்நாள் முழுவதும் போலி சாமியார்களையும் மதவாதிகளையும் கடுமையான முறையில் எதிர்த்தார்.

விவேகானந்தர் வாழ்ந்த காலத்தில் இந்தியா முழுவதும் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது பசுப் பாதுகாவலர்கள் விவேகானந்தரை சந்திக்கின்றனர். கடும் பஞ்சத்தில் பசுமாடுகள் உணவின்றி செத்து மடிகின்றன.

அதனைப் பாதுகாக்க நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். தங்களின் ஆசியுடன் உதவியும் செய்ய வேண்டும் என்கின்றனர்.

இதைக் கேட்ட விவேகானந்தர் கோபமுடன் மனிதர்கள் உணவின்றி செத்து மடிகிறார்கள். அவர்களுக்கு உதவ முன்வராமல் பசுப்பாதுகாப்பு என்கிறீர்களே என்கிறார்...

மனிதர்கள் உணவின்றி மடிவது அவரவர் கர்மபலன் என்கிறார்கள் பசுப் பாதுகாவலர்கள். உடனே கோபமுடன் எழுந்த விவேகானந்தர் அப்படியொரு கர்மபலன் இருந்தால் அந்த மாடுகளை விட கடுமையான துன்பத்தை நீங்கள் அனுபவிக்க வேண்டும் என சாபமிடுகிறேன் என பசுப் பாதுகாவலர்களைப் பார்த்து கொந்தளித்தவர் விவேகானந்தர்.

இன்று விவேகானந்தர் இருந்திருந்தால் அதைவிட பன்மடங்கு கோபம் கொண்டு மாநாடு நடத்திய சாமியார்களைப் பார்த்து சபித்திருப்பார்.

தென்னகத்தில் தோன்றிய திருமூலர் தொடங்கி நாராயணகுரு வரையில் எல்லோருமே அன்பை போதித்தனர். அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார் அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார் என்கிறார் திருமூலர்.

அன்பு கொண்ட மனிதர்கள் எல்லோருமே சிவனின் வடிவமே என்கிறார். சிவன் வேறு அன்பு வேறு என்று சொல்பவர்கள் அறிவில்லாதவர்கள் என கடுமையாகச் சாடுகிறார்.

அவர்தான் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றும், உள்ளம் கோயில் ஊனுடம்பு ஆலயம் என்றார். மனிதனுடைய உள்ளம் தான் கோயில் என்றும் சொன்னார்.... அதன் பிறகு வந்த சிவவாக்கியர் என்கிற சித்தர் இந்த போலி சாமியார்கள் எல்லாம் கடவுளின் பெயரால் மக்களை எதிர்காலத்தில் இப்படி ஏமாற்றுவார்கள் என தெரிந்தே இவ்வாறு பாடி வைத்துள்ளார்.

நட்ட கல்லை தெய்வமென்று நாலு புஷ்பம் சாத்தியே சுற்றி வந்து மொனென்று சொல்லும் மந்திரம் ஏதடா... நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில் என்று மனிதனுக்குள் தான் கடவுள் இருக்கிறார் என்று அவரும் மனிதநேயத்தை உயர்த்திப் பிடித்துச் சொன்னார்.

வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்று சொன்ன வள்ளலார் கருவறை தொடங்கி கல்லறை வரையில் மனிதனுக்கு தொடரும் பிணி பசிதான் என்றார். பசித்துன்பமே நரகம் என்றார்.

அதற்காக சத்திய தருமசாலையை நிறுவினார். இன்று வரைக்கும் பசி நீக்கும் அன்னதானம் தொடர்கிறது.

அனைத்து நம்பிக்கைகளிலும் உள்ள உண்மை ஒன்றே என்பதை குறிக்கும் வண்ணம் வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்கத்தை நிறுவினார்.

திருவருட்பா ஆறாம் திருமுறையில் எந்தச் சமயத்தின் நிலைப்பாட்டையும் எல்லா மத நெறிகளையும் சம்மதம் ஆக்கிக் கொள்கிறேன் என்றார்.

இறுதியாக மதமெனும் பேய் பிடியாதிருக்க வேண்டும்... என்றும் எச்சரிக்கை செய்தார்...உண்மைதான் மதம் பிடித்தால் எப்படி பேயாட்டம் ஆடுவார்கள் என்பதற்கான நிகழ்ச்சி தான் சாமியார்களின் மாநாடு.

**வள்ளலார் வாழ்ந்த சமகாலத்தில் வாழ்ந்தவர் காரல் மார்க்ஸ். மனித குலத்திற்கு பசிப்பிணி மட்டுமல்ல அனைத்து துன்பங்களையும் களைவது சாத்தியமே என விஞ்ஞான ரீதியாக சிந்தித்து அதற்கான தீர்வுகளைச் சொன்னவர். அவரும் கத்தோலிக்க பழமைவாத குருமார்களை எதிர்த்துதான் தன்னுடைய ஆய்வை வெளியிட்டார்.**

மகாத்மா காந்தி தன்னுடைய குருநாதராக வினோபாஜியை ஏற்றுக் கொண்டார். அந்த வினோபாஜி காரல் மார்க்ஸ் அவர்களை மகரிஷி என்று போற்றினார். தமிழ்த் தென்றல் திரு.வி.க மார்க்ஸ் முனிவர் என்று எழுதியதும் வரலாறாகும்.

**உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு**

தமக்கு நேரும் துன்பங்களை பொருட்படுத்தாமல் பிறர் துன்பங்களைக் களைய முற்படுபவர்கள் எல்லோருமே தவசிகள் என்கிறார் திருவள்ளுவர்.

அதனால்தான் உலக மக்களின் நன்மைக்காக சிந்தித்த காரல் மார்க்ஸை வினோபாஜியும் திருவிகவும் முனிவராக பார்க்கின்றனர்.

18 ஆம் நூற்றாண்டில் தோன்றிய தாயுமான சுவாமிகள் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே என்றார்.

அவர்தான் நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் என்று மனிதனுக்குள் தான் கடவுளைக் காண முடியும் என்றார். மேற்கண்ட இவர்கள் எல்லோருமே சாமியார்கள் மட்டுமல்ல ஞானிகள். இப்பேர்ப்பட்ட ஞானியர் உலவிய மண்ணில் சக மனிதரைக் கொல்ல ஆயுதம் தூக்குவோம் என்று சொல்லும் அந்த காவி கட்டிய வேடதாரிகளை என்னவென்று சொல்வதுஞ்


இந்த வேடதாரிகளின் பின்னால் அணி திரளும் மூட பக்தர்களை என்னவென்று அழைப்பதுஞ் போலி சாமியார்கள் உருவாவதற்கு இந்த போலி பக்தர்களும் காரணமாவார்கள்.

சைவம் வைணவம் என்று பல்வேறு நிலைகளில் பிரிந்திருந்த மக்களை ஒன்றுபடுத்த வெள்ளை அதிகாரிகளால் இடப்பட்ட பெயர் தான் இந்து. இன்றைக்கு இந்த சொல்லாடலை அரசியலில் முதலீடு செய்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது பாஜக.

கூச்சலிடும் சாமியார்கள் ஒன்றை உணர வேண்டும். இந்த தேசம் பன்முகத்தன்மை வாய்ந்தது. அதனை நிரூபிக்கும் வகையில் விரைவில் இந்தச் சாமியார்களின் கூச்சலுக்கு இந்திய மக்கள் மங்களம் பாடி நிறைவு செய்யும் காலம் வெகு தொலைவில் இல்லை.

தொடர்புக்கு: **94426 78721**

# திருத்துறைப்பூண்டியில் தீவிர வாக்கு சேகரிப்பு



திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில், 24 வார்டுகளை கொண்ட திருத்துறைப்பூண்டி நகராட்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு இடங்களில் போட்டியிடுகின்றன. 21 வது வார்டில் அதன் கிளை செயலாளர் ஐயப்பன் அவர்களின் மனைவி லட்சுமி அவர்களும், 24 வது வார்டில் நகர இளைஞர் பெருமன்ற முன்னாள் செயலாளர் குமார் என்கின்ற பி.முத்துகுமார் அவர்களும் போட்டியிடுகின்றனர். நகரத்தில் மிகவும் நெருக்கமாக பொது மக்களோடு தொடர்பினை கொண்ட இரண்டு வேட்பாளர்களுக்கும் வாக்கு கேட்டு சென்ற இடமெல்லாம் பொதுமக்கள் மகிழ்ச்சியோடு பேராதரவு அளித்தனர். முன்னாள் சட்டபேரவை உறுப்பினர் கே.உலகநாதன், ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர் எம்.வையாபுரி, சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், திமுக நகர செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் எஸ்.தமயந்தி, கே.சுஜாதா, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பி.வி.சந்திரராமன், ஒன்றிய செயலாளர் கே.பாலு, நகர செயலாளர் எம்.முருகேசன், மாவட்டக் குழு உறுப்பினர்கள் வி.முத்துக்குமரன், டி.பி.சுந்தர், ஜி.ராமலிங்கம் மற்றும் பூ மாலை பாலு திமுக, ஜி.வி.வெங்கடேஷ் திமுக ஆகிய தலைவர்கள் தலைமையில் 200 க்கும் மேற்பட்ட தோழர்கள் 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் கதிர் அரிவாள் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டனர்.

வேட்பாளர்களுக்கும், தலைவர்களுக்கும் சென்ற இடமெல்லாம் பொதுமக்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.



# சங்கே முழங்கு!

## பத்திரிகையாளர்களின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றி தர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி துணை நிற்கும்

# கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மு.வீரபாண்டியன் பேச்சு



சென்னை: சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் முன்பு, பிப். 11 அன்று, தமிழ்நாடு பத்திரிகையாளர்களின் பாது காப்பு கூட்டமைப்பு சார்பில் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் 200க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டு கோரிக்கை முழக்கங்களை எழுப்பினர். தமிழ்நாடு பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் இளசை கணேசன், செயலாளர் க.குரு ஆகியோர் தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து மு.வீரபாண்டியன் பேசிய தாவது, பத்திரிகைகளே சமூக மாற்றத்திற் கான கருவிகளாக இருந்திருக்கின்றன. சமூகத்தில் வெளிப்படும் எழுச்சிகளை, புதுமைகளை, பத்திரிகைகளே வெளி உலகத்திற்கு எடுத்துக்காட்டி, மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்துள்ளன.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் பத்திரி கைகளை, பத்திரிகையாளர்களை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும். பத்திரிகையாளர்களாகிய உங்களின் 10 அம்ச கோரிக்கைகளை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு சார்பில் தமிழக முதல்வரின் கவனத்துக்கு கொண்டு சென்று கோரிக்கைகளை நிறை வேற்றித்தர உரிய முயற்சிகளை மேற்கொள்வோம் என வீரபாண்டியன் உரையாற்றினார்.

இந்திய வெகுஜன பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.ஜெகதீசன், தமிழக ஊடக உரிமை குரல் மற்றும் பத்திரிகை பாதுகாப்பு சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.எம். தமிழன் வடிவேல், ஜனநாயக அனைத்து பத்திரிகை உறவுகள் பாதுகாப்பு நல சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.தர்மராஜா, அறிஞர் அண்ணா பத்திரிகையாளர் மற்றும் ஊடகவியலாளர்கள் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் அ.பால்ராஜ். இந்திய சுதந்திர பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தலைவர் எக்ஸ்.சார்லஸ், அறிஞர் அண்ணா தமிழ்நாடு பத்திரிகையாளர்களின் ஒருங்கி ணைப்புக்குழு சங்கத்தின் செயலாளர் வீ.கண்ணையா, ஆவடி பத்திரிகையாளர் மன்றத்தின் தலைவர் எம்.கே. மூர்த்தி, தலை மைச் செயலக பத்திரிகையாளர் சங்கத்தின் எம்.கண்ணன், தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் ஜீ.நாகராஜ் உள் ளிட்ட ஒருங் கிணைந்த சங்கங்களின் பிரதிநிதிகளும், தமிழ்நாடு பத்திரிகை மற்றும் ஊடக பணியாளர் சங்கத்தின் தலைவர் தாமரைப் பூவண்ணன், தமிழ்நாடு மூத்த பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் இதழாளர் இசைக்கும்மணி, தமிழ்நாடு நிருபர்கள் சங்கத்தின் தஞ்சை தமிழ்ப் பித்தன், தமிழ்நாடு பிரஸ் மீடியா ரிப்போட்டர் சங்கத்தின் தலைவர் சிவத்தமிழன் மற்றும் மூத்த பத்திரிகை செயல்பாட்டாளர்கள் வேல்முருகன், பா.கோபால கிருஷ்ணன், கவிஞர் சுமித்ரா, ரஜினி பாலா உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டு, பத்திரிகையாளர்கள் உரிமைகள், கோரிக்கைகள், அரசின் நலத்திட்ட உதவிகள், பத்திரிகையாளர்கள் நல வாரியம், பத்திரிகை யாளர்கள் சிறப்பு ஆணையம், பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு சட்டம், மூத்த பத்திரிகையாளர்களுக்கு அரசு ஓய்வூ தியம் மற்றும் குடும்பநல நிதி திட்டங்களில் முன்னுரிமை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து பேசினர்.

1. புதிய அரசு அடையாள அட்டை மற்றும் புதுப்பித்தலுக்கு விண்ணப்பித்த அனைவருக்கும் உடனடியாக அரசு அடையாள அட்டை வழங்குக!
2. பத்திரிகையாளர்களுக்கு அரசு அடையாள அட்டை வழங்கும் நடைமுறையில் குளறுபடிகளை தவிர்த்திடுக!
2. **RNI** யில் பதிவு செய்து பத்திரிகை வெளிவரும் அனைத்து பத்திரிகையாளர்களையும் பத்திரிகையாளராக அங்கீகரிக்க வேண்டும்!
4. **ACCREDITATION** மற்றும் **PRESS PASS** க்கு இடையே உள்ளே வேற்றுமையை நீக்கி அனைவருக்கும் ஒரே அரசு அங்கீகார அட்டை வழங்கிடுக !
5. **RNI** பதிவு பெற்று வெளிவரும் அனைத்து பத்திரிகைகளுக்கும் அரசு விளம்பரம் வழங்கிடுக!
6. அரசு அறிவித்த மருத்துவ காப்பீடு திட்டத்தில் அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் காப்பீடு வழங்கிடுக!
7. மற்ற மாநிலத்தில் இருப்பது போன்று பத்திரிகையாளர்களுக்கு தனியாக நல வாரியம் உடனடியாக அமைத்திடுக!
8. பத்திரிகையாளர்களுக்கு பாதுகாப்பு சட்டம் உடனே நிறைவேற்றிடுக!
9. கேரள மாநிலத்தில் இருப்பது போன்று பத்திரிகையாளர் அனைவருக்கும் (மாதாந்திர பென்சன் ரூ.11,000 **(Beneficiary Pension)** வழங்குக!
10. பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் தனி அரசு குடியிறுப்புகளை **(Journalist Colony)** உறுவாக்கிடுக!


உள்ளிட்ட கோரிக்கைகளை வலி யுறுத்தியும் பேசினர்.

## தன்னை அறிந்தால் பேரின்பம் -



பாஸ்கரன்

# தன்னலம் மறந்தால் பெரும் பேரின்பம்



**மானுட சிந்தனைப் பரப்பில் புதிய ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சிய தலைமகன்களில் ஒருவன் கிரேக்க தத்துவஞானி சாக்ரடீஸ். அவனது சீரிய சிந்தனையை புதிய புதிய வான் முகட்டிற்கு கொண்டு சென்றவர்கள் பிளேட்டோ மற்றும் அரிஸ்டாட்டில். இவர்களது சிந்தனை தான் ஐரோப்பிய கண்டத்தை தன்னிகரில்லா பல பரிமாணங்களில் ஆதிக்கம் செலுத்தியது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சி மற்றும் அறிவியல் வளர்ச்சி உயர் நிலையை எட்டும் வரை மேற்கண்ட சிந்தனையாளர்களின் வழித்தடத்தில் இருந்து பிரிந்து புதிய பாதைக்கு வரும் தைரியம் எவருக்கும் இல்லை.**

சாக்ரடீஸின் ஒட்டுமொத்த சிந்தனையையும் சில வரிகளில் திருக்குறள் வடிவத்தில் சுருக்கி விடலாம்.

முதலில் நீ உன்னை அறிந்து கொள் – உன்னையே வெல் – இதைச் செய்தால் உலகத்தையே வெல்வாய். எதையும் உனது சுய சிந்தனையால் ஆய்வு செய். ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாவிற்குள் அனைத்தையும் விமர்சனப்படுத்து''.

இந்த ஞான பாட்டையில் பயணிப்பவன் எப்படி மாமனித னாக வளராமல் இருக்க முடியும்? இந்த விழுமிய ஆழ்ந்த சிந்தனையைத் தான் உன்னை அறியும் பேரின்பம் என்றும், அதனோடு தன்னலம் மறந்து மானுடம் செழிக்க சுயநலம் துறந் தால் பெரும் பேரின்பம் என்று போகிறபோக்கில் கவியரசு கண் ணதாசன் இதே கட்டுரையில் தலைப்பு வரிகளில் சொல்கிறான்.

இந்த சிந்தனை பின்புலத்தோடு சுதந்திரத்திற்கு முன், சுதந் திரத்திற்கு பின் இந்திய நாட்டின் அரசியல் வாழ்வு – பொது நல வாழ்வு, மற்றும் தனிநல வாழ்வு ஆகியவற்றை ஆய்ந்து பரிசீலிப்பது காலத்தின் கட்டாயம். நம் நாட்டின் அரசியல் முக்கியப் புள்ளிகள் என்றால் அதற்கென்று தனி இலக்கணம் இருக்கிறது. நடை, உடை, பாவனை இருக்கிறது – வாழ்க்கை முறை இருக்கிறது.

குறைந்த பட்சம் 500 முதல் 1000 எண்ணிக்கையில் உடை ஜோடிகள், உயர் வகை காலணிகள், விலை உயர்ந்த வெளி நாட்டு காரும், ஐந்து வில்லன்களும், நவரத்தின மோதிரங்கள், வெளிநாட்டு கார்கள் மூன்றிலிருந்து பத்து வரை மதிப்பு போட முடியாத பல பங்களாக்கள், அரசியல் வணிகத்தில் கொள் ளையடித்த பணத்தில் ஏராளமான பினாமி நிறுவனங்கள், அவற் றில் பல கோடி முதலீடுகள், ஒரு முக்கிய புள்ளியின் சமூகத் திருட்டு சொத்துக்களுக்கு பினாமி என்று சொல்வதே சமூக அந்தஸ்தாக கௌரவமாக மாறிவிட்டது. ஜவுளி கடைக்கு சென்றாள் எம்எல்ஏ காட்டன், மினிஸ்டர் காட்டன் என்ற தனிப் பிரிவு இருக்கிறது.

பட்டுக்கோட்டை கவிஞனின் வார்த்தையில் சொன்னால், ''பட்டப்பகல் திருடர்களை பட்டாடை பளபளக்கும் கார்களும், பங்களாக்களும் மறைக்கிறது. இந்த கணவான்கள்தான் மக்களுக்கு தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்திருப்பதாக வாய்கிழிய பேசுகிறார்கள்.

பிரிட்டன் பிரதமர் சர்ச்சில் தேசத்தந்தை காந்தியை அரை நிர்வாண பக்கிரி என்று இழிவாகப் பேசினார். அவர் ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் அரசியல் பேரம் பேசவில்லை, பணப்பெட்டியை கை மாற்றவில்லை.

**ஆட்டுப் பாலும், நிலக்கடலையும் தான் அவர் சாப்பிட்ட உயர்வகை உணவு. அவர் மரணம் அடைந்தபோது அவரது உடைமைகள் ஒரு கை ராட்டினம், துளசி ஜபமாலை, கீதை புத்தகம், சாதாரணமான ஒரு ஜோடி செருப்பு, ஒரு மூக்குக் கண்ணாடி, நான்கு வேட்டி, நான்கு துண்டு, இருபது ஆண்டு காலம் சிறையில் இருந்தார். எந்த சுகத்தையும் இளமை முதல் இறக்கும் வரை அனுபவிக்கவில்லை.**

''நான் என் மனைவிக்கு நல்ல கணவனாக நடந்து கொள்ள வில்லை; என் பிள்ளைகளுக்கு பொறுப்பான தந்தையாக கடமையை செய்யவில்லை; என் பெற்றோருக்கும் எனது கட மையை செய்யவில்லை'' என்று தனது சுயசரிதையான சத்திய சோதனையில் குறிப்பிடுகிறார்.

காந்தி மறைவின்போது அறிஞர் பெர்னாட்ஷா கீழ்க்கண் டவாறு குறிப்பிட்டார். ''காந்தி மிக நல்ல மனிதனாக வாழ்ந்ததற்கு அவருக்கு வழங்கப்பட்ட சன்மானம் துப்பாக்கிச்சூடு. விடுதலை போராட்ட வீரர் ஜீவா தியாகிகள் பென்சன் வாங்கவில்லை, காமராஜர் அரசு குடியிருப்பு வழங்க முன்வந்தார் ஏற்கவில்லை. தனது ஆருயிர் நண்பரான ஜீவாவிற்கு ஒரு ஜோடி வேட்டி சட்டை கூட வாங்கித்தர முடியவில்லையே என மிகவும் வருத் தப்பட்டார் காமராஜர். ஒருமையில் பேசிக்கொள்ளும் அளவிற்கு ஆருயிர் நண்பர்கள். ஒரு முறை மிகவும் கோபப்பட்டு ''ஜீவா நீ உருப்படவே மாட்டாய்'' என்று சொன்னார். எனவேதான் உயிர் பிரியும் முன்னால் காமராஜுக்கு தகவல் சொல்லுமாறு தன் மனைவியிடம் ஜீவா கூறினார். ஜீவா சட்டமன்ற உறுப்பினராக இருந்து ஆற்றிய உரைகள், வரலாற்று ஆவணமாக உள்ளன. இப்படித்தான் ஒரு கம்யூனிஸ்ட் இருக்க முடியும். இது நமக்கு மார்க்சிடமிருந்து தொடர்ந்து வரும் புரட்சிகர மரபு.

ஒருமுறை தோழர் கல்யாண சுந்தரம் முதல்வர் காமராஜரை பார்க்க கோட்டைக்குச் சென்றார். அடுத்த நிமிடமே முதல்வர் அவரைச் சந்தித்தார். காங்கிரஸ் பிரமுகர்கள் அதனால் கோபமடைந்து எங்களை இவ்வளவு நேரம் காக்க வைத்து விட்டு, அவரை உடனே சந்திக்கிறீர்களே என்று கேட்டார்கள். அவர் மக்கள் பிரச்சினைகளுக்காக வருகிறார், அதனால் உடனே சந்தித்தேன். நீங்கள் உங்கள் பிரச்சினைகளுக்காக வருகிறீர்கள் என்று பதிலடி கொடுத்தார் காமராஜர்.

தோழர் எம்.கே. தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் போராட்ட ஏற்பாடுகளை செய்ய வெளியூரில் இருந்தார். அவரின் ஒரே மகள் பாம்பு கடித்து இறந்து விட்டார். அவர் திருச்சி ரயில்வே நிலையத்தை அடைந்தார். அங்கு திரண்டிருந்த பல்லா யிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் தலைவனை பார்த்து கதறி அழுதார்கள். அப்பெரும் துன்பத்தை அமைதியோடு தாங்கிக்கொண்டார். தன் மகளின் இறுதிச் சடங்கை முடித்து விட்டு மறுநாளே தனது பணியை தொடங்கினார். இதையும், எதையும் தாங்கும் இதயம் கம்யூனிஸ்டுகளுக்கு மட்டும்தான் உண்டு. உலக அளவில் வளர்ந்துவிட்ட பிரதமர் இந்திரா காந்தியை 'இந்து' என்று ஒருமையில் கூப்பிடும் தைரியம் பூபேஷ் குப்தாவிற்கு இருந்தது. நாடாளுமன்றத்தில் பேச எழுந்தால் அவையே நிசப்தமாய் அவர் பேச்சைக் கேட்கும். அந்தச் சாதனையை இதுவரை யாரும் முறியடிக்கவில்லை. அவர் மிக மிக மலிவான கைத்தறி உடையை அணிந்தார். இன்றைய வங் காளதேசத்தில் ஜமீன் குடும்பத்தில் பிறந்த அவரின் குடும்ப நிலத்தை அரசு எடுத்துக் கொண்டதால் பெரும் தொகையை ஒதுக்கீடு செய்தது. அனைத்து மக்களுக்கும் சொந்தமான நிலம் அவர்களுக்கு மீண்டும் சென்று விட்டது என்றார். பணம் பெற மறுத்துவிட்டார்.

ஒரு பத்திரிக்கையாளர் அந்தப் பெரும் நிதியை கட்சிக்கு வாங்கிக் கொடுத்திருக்கலாமே என்று சொன்னார். எனது லட்சியமும், எனது கட்சியும் அவ்வளவு மலிவானது அல்ல என்று சொன்னார். இவை தான் கம்யூனிஸ்டுகள் தன்னை அறிந்து பேரின்பமும், தன்னலம் மறந்து பெரும் பேரின்பம் அடையும் புரட்சிகரப் பார்வை.

தொடர்புக்கு: **96007 23726**

## கட்சிக் கட்டுப்பாட்டை மீறி செயல்பட்ட

# இருவர் நீக்கம்

நடைபெற்று வரும் நகர்புற உள்ளாட்சி தேர்தலில் கோவை மாநகரத்தில் தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் தொகுதி உடன்பாடு ஏற்பட்டு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர்கள் நான்கு தொகுதிகளில் போட்டியிடுகிறார்கள்.

இந்த நிலையில் குனியமுத்தூரை சேர்ந்த கட்சி உறுப்பினர் வி.நிரஞ்சனாதேவி வார்டு எண் 97 ல் கட்சியின் கட்டுப்பாடுகளை மீறி போட்டியிடுகிறார். அவருக்கு துணையாக அவரது கணவர் பா.விஜயகுமார் செயல்பட்டு வருகிறார். எனவே, கட்சி கட்டுப்பாட்டை மீறியுள்ள விஜயகுமார் மற்றும் நிரஞ்சனாதேவி ஆகிய இருவரும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கப்படுகிறார்கள். அவர்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இனிமேற்கொண்டு எவ்வித சம்மந்தமும் இல்லை. கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அவர்களுடன் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் வி.எஸ்.சுந்தரம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

ப.மாணி

# இந்தியக் கம்யூ

# கொ

## போராட்ட




**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925 டிசம்பர் 26ல் கான்பூரில் துவக்கப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பல அரசியல் போராட்டங்களை நடத்தியுள்ளது. தொழிலாளி வர்க்கத்தின் பல போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியுள்ளது. ஸ்தாபன அமைப்பை வலுப்படுத்தியுள்ளது. விவசாயிகள், மாணவர்களின் போராட்டங்களை நடத்தியும், அதனதன் ஸ்தாபன அமைப்புகளை உருவாக்கியும் பாடுபட்டு வருகிறது.**

கலாசாரத் துறையிலும், சமூகத் துறையிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்கு மகத்தானது. இந்நாட்டின் அரசியல் விடுதலைக்காகவும், புரட்சிகர சமுதாய மாற்றத்திற்காகவும் கம்யூனிஸ்ட் கட்சி செய்துள்ள தியாகம், கொடுத்துள்ள உழைப்பு, ஆற்றியுள்ள பங்கு மிக உன்னதமானது.

கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்றை ஒரு கட்டுரையில் எழுதுவது முடியாது. எனவே கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்றின் கட்டுக்கோப்பு மட்டுமே இக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### துவக்க காலம்

1917 நவம்பர் புரட்சியின் வெற்றியும், அதையொட்டி நடந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரசாரமும் இந்திய மக்களிடையே, படித்தவர்களிடையே பல பிரதிபலிப்புகளை ஏற்படுத்தியது. நாட்டின் விடுதலைக்காக உழைத்த தீவிர புரட்சிக்காரர்களிடம் நவம்பர் புரட்சி நமது நாடு விடுதலைபெற வழிகளைக் காட்டியது. இப்படிச் சிந்தித்தவர்கள் விடுதலை இயக்கத்தில் பங்கு பெற்றவர்கள், பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுமைகளுக்கு உள்ளானவர்கள் ஆவர்.

இதில் சிலரை நாம் குறிப்பிட்டேயாக வேண்டும். பம்பாயில் தோழர் டாங்கே, சென்னையில் தோழர் சிங்காரவேலு செட்டியார், கல்கத்தாவில் தோழர் முசாபர் அஹமது, லாகூரில் குலாம் ஹுசேன், உத்தரப் பிரதேசத்தில் ஷௌகத் உஸ்மானி ஆகியோர் ஆவர். இவர்கள் மீது 1924 மார்ச் மாதத்தில் கான்பூர் போல்ஷ்விக் சதிவழக்கு என்று ஒன்று தொடுக்கப்பட்டது. இதற்கும் முன்னதாக, 1922ம் ஆண்டில் கைது செய்யப்பட்ட சிலர் மீது பெஷாவர் கம்யூனிஸ்ட் சதிவழக்கு தொடரப்பட்டு, 1923ல் தண்டனையும் தரப்பட்டது. இதில் தண்டிக்கப்பட்டவர்கள், சோவியத் யூனியனுக்கு 1920ல் சென்று 1921, 1922ல் திரும்பிய ‘‘ஹிஜ்ரத் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.


இவர்கள் பொதுவாக கம்யூனிஸ்ட் லட்சியத்தின் மீதும், இந்தியாவில் புரட்சி நடத்த வேண்டுமென்றும் திட்டமிட்டவர்கள் ஆவர். கான்பூர் கம்யூனிஸ்ட் சதி வழக்குதான், இந்தியாவில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உருவாகும் நிலை இருப்பதை, இந்திய மக்களுக்கு உணர்த்தியது.

### ஆதர்சமாக மூன்றாவது அகிலம்

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் கட்சியைத் துவங்குவதற்கு தத்துவார்த்த, அரசியல், ஸ்தாபன ஆதர்சமாக கம்யூனிஸ்ட் அகிலம் விளங்கியது. மூன்றாவது (கம்யூனிஸ்ட்) அகிலம் 1919ல் தோழர் லெனினால் துவங்கப்பட்டது.

1920ல் கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் ‘‘அடிமை நாடுகளின் விடுதலை இயக்கம்‘‘ பற்றி தீர்மானம் நிறைவேறியது. இந்த முடிவு இந்தியாவிலிருந்த புரட்சியாளர்களுக்கு அரசியல், தத்துவார்த்த தெளிவைத் தந்தது.

இதன் விளைவுதான் 1921லிருந்தே ஆரம்ப கம்யூனிஸ்ட் குழுக்கள் உருவாக உதவியது, 1920ம் ஆண்டு மாணவர் இயக்கத்திற்காக கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்ட தோழர் டாங்கே ஒத்துழையாமை இயக்கத்திலும் பங்கு கொண்டார். 1921ம் ஆண்டில் தோழர் டாங்கே ‘‘காந்தியும் லெனினும்‘‘ என்ற நூலை எழுதி இரண்டு வழிகளுக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டினார். அந்த நாளில் காந்தியின் அரசியல், இயக்க வழிகளை விமர்சிக்க மிக அதிகமான மனோதிடம் வேண்டும். இந்நூல் இந் நாட்டின் விடுதலைக்கு புரட்சிகரமான லெனின் வழி தேவை என எடுத்துக் காட்டியது. 1922ல் சோஷலிஸ்ட்’’ என்ற பத்திரிகையை பம்பாயில் ஆரம்பித்து தோழர் டாங்கே நடத்தினார். கல்கத்தாவில் முஸாபர் அஹமதும், சென்னையில் சிங்காரவேலு செட்டியாரும் பத்திரிகைகள் நடத்தினார்கள்.



சிங்காரவேலு செட்டியார் ‘‘லேபர் கிசான் கெஜட்’’ என்ற பத்திரிகையை ஆரம்பித்து நடத்தினார். தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை, வர்க்கப் போராட்டங்கள், சோஷலிஸ்ட் புரட்சி ஆகியன பற்றியெல்லாம் கட்டுரைகளை எழுதி வழங்கினார்.

சிங்காரவேலு செட்டியார் காங்கிரசிலும் செயலாற்றினார். தொழிலாளர் இயக்கத்தையும் நாட்டின் விடுதலை இயக்கத்தையும் இணைத்து நடத்திய தலைவர் இவர்.

முதல் மாநாடு

1924ல் கான்பூர் சதிவழக்கு நடந்தசமயம்சத்யபக்தா என்பவர், பிரிட்டிஷ் அவதூறுகளுக்கு அஞ்சி இந்தியாவிற்கெனத் தனி கம்யூனிஸ்ட் கட்சியை, உலக இயக்கத்தோடு தொடர்பற்ற கட்சியை உருவாக்க நினைத்தார். இவர் 1925 டிசம்பரில் ஒரு பகிரங்க கம்யூனிஸ்ட் மாநாட்டை கூட்டினார். இந்த மாநாட்டில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து கம்யூனிஸ்டுகள் வந்து பங்கெடுத்தனர்.

இந்த மாநாட்டில் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தோடு தொடர்புள்ள கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க முடிவு எடுத்தனர். சத்யபக்தாவின் குறுகிய தேசிய நிலைக்கட்சி என்கிற கருத்து தோற்கடிக்கப்பட்டது. இது இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு ஏற்பட்ட முதல் தத்துவ வெற்றியாகும். தோழர் காட்டே கட்சியின் பொதுச் செயலாளராகச் செயலாற்றினார். இது கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு ஸ்தாபனத் துறையில் ஏற்பட்ட வெற்றியாகும். கட்சியின் ஆரம்பகாலத்தில் தோன்றிய தத்துவார்த்த, ஸ்தாபன சோதனைகளில் கட்சி வெற்றி கண்டது. அடக்குமுறையில் தலை நிமிர்ந்தது மட்டுமல்ல கட்சியின் தத்துவ, ஸ்தாபனத் துறையிலும் அது பக்குவம் பெற்றது.

### சதி வழக்குகள்

1924ல் கான்பூர் சதி வழக்கும், 1929–33ல் மீரத் சதி வழக்கும் நடந்தன. வளர்ந்து வந்த கம்யூனிஸ்ட் இயக்கத்தை அடக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சதிவழக்குகளை கையாண்டது.

ரயில்வேத் தொழிலாளர்கள், பஞ்சாலைத் தொழிலாளிகள், சணல் ஆலைத் தொழிலாளர்கள் மத்தியில் கட்சி வேலை செய்தது. தொழிலாளர் விவசாயிகள் கட்சி என்கிற அமைப்பு பகிரங்கமாக பல மாநிலங்களில் வேலை செய்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து நாடு விடுதலை பெற வேண்டும் என்னும் ஆர்வத்தோடு கட்சி, சைமன் கமிஷன் எதிர்ப்பு போராட்டத்திலும் பங்கு கொண்டது.

தலைமறைவு வாழ்க்கையில் அனுபவமில்லாத நிலையில் கட்சியின் ஊழியர்கள், தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டு சதி வழக்குகளில் சேர்க்கப்பட்டனர்; தண்டிக்கப்பட்டனர். இதனால் சுமார் 10 ஆண்டுகள் கட்சி அமைப்பு முறையாகச் செயலாற்றுவது பாதிக்கப்பட்டது. அடக்கு முறையை எதிர்த்து உறுதிகுலையாது நின்றதால் அரசியல், தத்துவார்த்தத் துறையில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இந்திய மக்களிடம் செல்வாக்கு வளர்ந்தது, கட்சியின் முக் கிய தலைவர்கள் சிறையிலிருந்தனர். வெளியிலிருந்த தோழர் களிடையே அரசியல், தத்துவார்த்த சர்ச்சைகள் தோன்றி ஸ்தாபனமும் சரிவரச் செயல்பட முடியாமல் போயிற்று.

இக்காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் அகிலமும், மற்ற சகோதரக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் புனரமைக்க தத்துவார்த்த, அரசியல் துறைகளில் உதவி புரிந்தன.

### பாதை எது?

1924–33 இந்த ஆண்டுகளில் கம்யூனிஸ்ட் இயக்கம் இந்தியாவில் ஒரு போர்க்குணமுள்ள இயக்கமாக வளர்ந்தது. இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொள்ள வேண்டிய நீண்ட காலப் பாதை பற்றியும், குறுகிய காலத்திற்கு மேற்கொள்ள வேண்டிய அரசியல் நடைமுறைகள் பற்றியும் கருத்து வேறுபாடுகள் தோன்றின.

1. இந்தியாவில் எத்தகைய புரட்சிப்பாதையை மேற்கொள்வது?
2. இந்தியாவில் காங்கிரஸ் தலைமையில் நடக்கும் விடுதலை இயக்கத்தின்பால் என்ன நிலை?

இப்பிரச்னைகளில் ஒருதரப்பு கருத்து: சோஷலிஸப் புரட்சிக்கு நேரடியாகப் பாடுபடுவது, காங்கிரஸ் தலைமையிலுள்ள விடுதலை இயக்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடம் சமரசம் செய்யும் இயக்கம், எனவே வேறு ஒரு புரட்சிகரமான பொது ஸ்தாபனத்தை உருவாக்குவது என்பதாகும்.

### மறுதரப்பு கருத்து:

இந்தியாவில் முழு விடுதலைக்குப் போராடுவது முதற் கட்டக் கடமை, இதைத் தொடர்ந்து அடுத்தகட்டத்தில்தான் சோஷலிஸப் புரட்சிக்குப் போகமுடியும். எனவே காங்கிரஸ் தலைமையிலுள்ள விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டு வலுப்படுத்துவதும் சமரசப் போக்கை எதிர்த்து போராடுவதும் நமது கடமை என்பதாகும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு என்கிற பொது அம்சம் இருதரப்பின் கருத்துக்களில் இருந்தபோதிலும், நேச சக்திகளைத் தீர்மானிப்பதில் முரண்பாடு ஆழமாக இருந்தது. வேறு வழியில் கூறுவதென்றால், இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின்பால் என்ன அரசியல் அணுகும் முறை என்பதே சர்ச்சையாக இருந்தது.


இந்த சர்ச்சை ஒவ்வொரு கட்டத்திலும் தோன்றியுள்ளது. இதன் துவக்கம் 1927–28 லிருந்தே உண்டு. 1930ல் சட்டமறுப்பு இயக்கம் நடந்தபோதும், அதில் கலந்து கொள்வதா, வேண்டாமா என்கிற சர்ச்சை எழுந்தது. கட்சியின் தலைமை முழுமையும் மீரத் சதிவழக்கில் சிறையிலிருந்தது.

இப்படிப்பட்ட நிலைமையில் வெளியிலிருந்த கம்யூனிஸ்டுகள் தெளிவான முடிவுக்கு வரமுடியவில்லை, இருப்பினும் பல கம்யூனிஸ்டுகள் சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கு பெற்றனர். இந்த சட்டமறுப்பு இயக்கத்தில் நமது கட்சி முழுமையாகப் பங்கு பெற்றிருக்க வேண்டும் என்பது வரலாறு கூறும் முடிவாகும்.

### ஐக்கிய முன்னணிக் கொள்கை

1935ல் கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் ஐக்கிய முன்னணி பற்றி தெளிவான நிலை எடுத்து உலக இயக்க வளர்ச்சிக்கு உதவியது. ஐரோப்பாவில் ஹிட்லர், முஸோலினி போன்றவர்களால் நடத்தப்பட்ட பாசிஸ்ட் இயக்கம் ஜனநாயக இயக்கங்களையும், தொழிலாளர் இயக்கங்களையும் நசுக்கி ஒடுக்க முயற்சித்தது. இதை எதிர்த்து பாசிஸ்ட் எதிர்ப்பு முன்னணி கட்டப்பட்டது.

இதுபோன்றே ஏகாதிபத்திய வல்லரசுகளின்கீழ் அடிமைப் பட்டுக் கிடக்கும் நாடுகளில், ஐக்கிய முன்னணியைக் கட்டி விடுதலைக்குப் போராடுவதன் மூலம், பல அடிமை நாடுகள்



**உழைப்பாளிகளின் உழைப்பில் விளைந்த உற்பத்திப் பொருட்கள் யாவும் உடைமையாளர்களிடம் போய் சேர்வதால் அது உற்பத்தி செய்த உழைப்பாளிகளை அடிமைப்படுத்துவதற்கான வலுமிக்க சாதனமாகிவிடுகிறது. – ஏங்கல்ஸ்**

...ரிக்கம்

# ...னிஸ்ட் கட்சியின் ...ள்கை வரலாறு




விடுதலை பெற முடியும் என வலியுறுத்தப்பட்டது.

இந்த முடிவு இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சிக்கும் நெருங்கிய ஒத்துழைப்பை 1936ல் ஏற்படுத்த உதவியது. காங்கிரசுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அரசியல் ஒத்துழைப்பை ஏற்படுத்தியது.

1936–42 வரை இத்தகைய அரசியல் நிலை, ஐக்கிய முன்னணிக் கொள்கை கட்சிக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுக்கும் நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்தியது. நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு போராட்டங்கள் வளர்ந்தன. மாணவர் போராட்டங்கள் வளர்ந்தன.

1936ல்தான் அகில இந்திய விவசாய சங்கமும், அகில இந்திய மாணவர் பெருமன்றமும் உருவாக்கப்பட்டன. இதில் காங்கிரஸ் சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒத்துழைத்தன. 1936லிருந்து 1941 முடிய இந்த நிலை நீடித்தது.

இக்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பல துறைகளில் வேலை செய்தது. இருப்பினும் கம்யூனிஸ்ட்கட்சி வெளிப்படையாகச் செயலாற்ற முடியாமல் தலைமறைவாகவே செயலாற்ற முடிந்தது. கம்யூனிஸ்ட் என்று தெரிந்தால் வேலை போய்விடும், படிப்பு போய்விடும், தொழில் நடத்துவதும் கடினம். பிரிட்டிஷ் ஆட்சி கம்யூனிஸ்ட் கட்சியைத் தடைசெய்து வைத்திருந்தது.

இத்தகைய அடக்கு முறையிலும், வசதியற்ற சூழ்நிலையிலும் கம்யூனிஸ்ட்டுகள் ஒவ்வொருவரும் கட்சியின் யூனிடுகளில் (செல்கள்) முறையாக இயங்கி, கட்சி வேலையைச் செய்து தொழிற்சங்கம், விவசாய சங்கம், மாணவர் பெருமன்றம் போன்ற அமைப்புகளைக் கட்டி வளர்த்தனர்.

### தமிழகத்தில் கட்சி வளர்ச்சி

தமிழகத்தில் கோவையில் பஞ்சாலைத் தொழிலாளிகள் மத்தியிலும், திருச்சியில் ரயில்வேத் தொழிலாளிகள் மத்தியிலும், மதுரையில் பஞ்சாலை தொழிலாளர்கள் மத்தியிலும் சென்னையிலும் பல தொழிற்சங்கங்களைக் கட்டி வளர்த்தனர். பல தொழிலாளிகள் பழிவாங்கப்பட்டனர். ஆனால் இயக்கம் தளர்ச்சியடையவில்லை.

மாணவர் இயக்கமும் இக்காலத்தில்தான் வளர்க்கப் பட்டது. 1938ல் பெரும் போராட்டம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடந்தது. இப்போராட்டத்திற்கு தோழர் பாலதண்டாயுதம் தலைமை தாங்கினார். 1941ல் மதுரை, அண்ணாமலை, சென்னை போன்ற இடங்களில் மாணவர் போராட்டங்கள் நடந்தன, பலர் கைது செய்யப் பட்டனர். இவர்கள் கட்சியை தமிழகத்தில், சென்னையில் மிகச் சோதனைமிக்க காலத்தில் உருவாக்கினார்கள். அவர்களது கடினமான உழைப்பும் தியாகமும் மறக்க முடியாதது.

1935 முதல் 41 வரை கட்சியின் ஆரம்ப தலைமைக் குழுவும், அடித்தளமும் தமிழகத்தில் உருவாக்கப்பட்டன. குறைந்த எண்ணிக்கையுள்ள தோழர்களின் கடினமான உழைப்பு, தன்னலமற்ற தியாகம் கம்யூனிஸ்ட் கட்சியை ஒரு திடமான கட்சியாக உருவாக்கியது.

1940–41ம் ஆண்டுகளில் யுத்தத்தை எதிர்த்து பல தொழிலாளர் போராட்டங்கள் நடந்தன. இக்காலத்தில் நடந்துள்ள வேலைகளின் அனுபவத்தை கட்சியின் விரிவான வரலாற்றில் ஆராய்வது பெரிதும் பலனளிக்கும்.

### ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் பிளவு

1941 ஜூன் மாதத்தில் சோவியத் யூனியனை ஹிட்லர் தாக்கினான். அச்சு நாடுகள் படையெடுத்தன. உலகெங்கிலும் உள்ள ஏகாதிபத்திய எதிரிகள் சோவியத் யூனியனுக்கு ஆதரவாகத் திரண்டனர். உலகப் போரில் திருப்பம் ஏற்பட்டது. அதன் குணமும் மாறியது.

பாசிஸ்ட் ராணுவ வெறியை எதிர்க்கும் “மக்கள் யுத்தமாக மாறியது. நமது நாடு விடுதலைக்குப் போராடும் நாடு, அதன் அனுதாபம் சோவியத் யூனியன் பக்கம்தான் என்றாலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் எவ்வாறு இது சாத்தியம் என்கிற ஐயப்பாடு எழுந்தது.

இதுவே காங்கிரசுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் கருத்து மாறுபாட்டை ஏற்படுத்தியது. அரசியல் நடைமுறையில் 1942ல் நடந்த ஆகஸ்ட் போராட்டம் பற்றி கருத்து மோதல் ஏற்பட்டது. காந்திஜி செய் அல்லது செத்து மடி” “வெள்ளையனே வெளியேறு” என்று முழக்கமிட்டார்.

நமது கட்சி இத்தகைய போராட்டம் உலக பாசிஸ்ட் எதிர்ப்பு அணியை பலவீனப்படுத்தும் எனக் கருதியது. இதனால் வேறுபட்ட நிலைகள் தோன்றின. நமது கட்சி மீது தேசியவாதிகள் அவதூறு கூறினர். நாம் ஆகஸ்ட் போராட்டத்திற்கு 1942ல் அரசியல் ஆதரவு நிலை எடுத்திருந்தால் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் பிளவு ஏற்பட்டிருக்காது.

பாசிஸ எதிர்ப்புக் கடமைகளையும், பிரிட்டிஷ் ஆதிக்க எதிர்ப்புக் கடமைகளையும் இணைப்பதில் நமது அரசியல் நடைமுறையில் தவறு ஏற்பட்டது. விடுதலைக்குப் போராடிய மக்களைப்பற்றி சரிவர மதிப்பிடத் தவறினோம்.

இதைப் பயன்படுத்தி ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் பிற்போக்காளர்கள், பிளவை உண்டாக்கினார்கள்.

1942 முதல் 1945 வரை நமது கட்சி எதிர் நீச்சல் அடித்துத்தான் நாடு தழுவிய முறையில் கட்சியைக் கட்டி வளர்த்தது. வர்க்க இயக்கங்கள் வளர்ந்தன.

1945ல் உலகப் போர் முடிவுற்றது. இந்தியாவின் விடுதலைப் பிரச்சனை வெடித்து எழுந்தது. 1945–46ம் ஆண்டுகளில் பஞ்சாலை, ரயில்வே தொழிலாளர் போராட்டங்கள், இந்திய தேசிய ராணுவத்தின் விடுதலைப் போராட்டம் இந்தியக் கடற்படைவீரர்கள் போராட்டம் நடந்தன. இப் போராட்டங்கள் இணைந்தன. இதன் காரணமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்திய மக்களுக்கு அதிகாரத்தை மாற்றம் செய்ய ஒத்துக் கொண்டது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு கடைசித் தளமாக இருந்த இந்திய ராணுவம் இந்திய மக்கள் பக்கம் சேர்ந்ததால் ஏகாதிபத்திய ஆட்சி ஆட்டம் கண்டு வீழ்ந்தது. 1947 ஆகஸ்டில் அதிகார மாற்றம் நடைபெற்றது. 1946ல் நடந்த ரயில்வேத் தொழிலாளர் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தியவர் தோழர் கல்யாணசுந்தரம் ஆவார். மேலும் 1945–46ம் ஆண்டில் நடந்த பல போராட்டங்களின் விளைவாக சதி வழக்குகளும் போடப் பட்டன. கம்யூனிஸ்ட் தலைவர்கள் பாதுகாப்புக் கைதிகளாக அடைக்கப்பட்டனர். அனைவரும் 1947 ஆகஸ்ட் 15ல் விடுதலையானார்கள்.

### தமிழ்நாட்டின் நிலைமை

1942 முதல் 47 முடிய தமிழகத்தில் கட்சியின் தலைமையில் நடந்த எண்ணற்ற போராட்டங்கள் அரசியல் அவதூறுகளை அடித்து நொறுக்கின. கட்சியின் சுயபலம் பெருகி வளர்ந்தது. நாட்டின் விடுதலைக்கு கட்சியின் தலைமையில் திரண்டிருந்த உழைப்பாளிகள் தங்கள் பங்கை ஆற்றினர். இக் காலகட்டத்தில்தான் தஞ்சை, ராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் பலமான விவசாய இயக்கம் வளர்ந்தது.

பல கம்யூனிஸ்டுகள் இக்காலத்தில் அரசாங்க அடக்குமுறை, ரௌடிகளின் தாக்குதல், நிலப்பிரபுக்கள், மில் முதலாளிகளின் தாக்குதலுக்கு ஆளானார்கள், பழிவாங்கப்பட்டார்கள். சுதந்திரத்திற்கு நாம் கொடுத்த விலை இது.

### மீண்டும் தவறான நிலை

1947 ஆகஸ்டில் இந்திய மக்களுக்கு அதிகார மாற்றம் ஏற்பட்டது. நாடு பிரிக்கப்பட்டது. இதில் காங்கிரஸ் தலைமை இந்திய முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் பாத்திரத்தை ஏற்றது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்திய சுதந்திரத்தை உருக்குலைக்க காஷ்மீர் பிரச்னையை உருவாக்கியது. வகுப்புக் கலவரம் மூண்டது. ஏகாதிபத்திய அரசியல் சூழ்ச்சிகள் நடைபெற்றன. இதை எதிர்த்து நமது கட்சி அரசியல் போராட்டம் நடத்தியது. கட்சிக்குள் இந்திய அரசைப் பற்றியும், இந்திய அரசியல் நிலைமை பற்றியும் முரண்பட்ட கருத்துக்கள் தோன்றின. சுதந்திரம் உண்மையானதா? போலியானதா? என்கிற வாதமும் மோதின. இந்தியாவில் மக்கள் ஜனநாயகப் புரட்சியையும், சோஷலிசப் புரட்சியையும் இணைத்து நடத்தும் காலம் வந்துவிட்டது, அரசியல் அதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கையில் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்றவாறு பேசப்பட்டது.

“உழுபவனுக்கு நிலம்“ “மக்களுக்கு அதிகாரம்“ என்கிற இரு கோஷங்களை கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் வைத்தது. இது இந்திய வர்க்க நிலைமைகளுக்கும், அரசியல் யதார்த்தத்திற்கும் புறம்பானது. ஏகாதிபத்திய சூழ்ச்சியைக் குறைத்து மதிப்பிட்டது. தொழிலாளி வர்க்கத்தின் நேச சக்திகளைச் சரிவர மதிப்பிடத் தவறியது. இவற்றின் விளைவாக தொழிற்சங்க இயக்கம், விவசாயிகள், மாணவர் இயக்கம் குறுகிய கண்ணோட்டத்தில் செயல்பட்டு, அடக்குமுறைக்கு ஆளாகி, சீர்குலைந்தது. தமிழகத்தில் ரயில்வே, பஞ்சாலை, சர்க்கரை ஆலை, முனிசிபல் தொழிலாளர்கள் விவ சாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் ஸ்தாபனங்கள் அடக்கு முறைக்கும், சீர்குலைவுக்கும் உள்ளாயின.

இத்தகைய செக்டேரியன் போக்கு 1948லிருந்து 1951 வரை நீடித்தது. தமிழகத்தில் பல மாவட்டங்களில் சதிவழக்குகள், துப்பாக்கிச் சூடுகள் நடந்தன. மதுரையில் 4 தோழர்கள் சுடப்பட்டனர். தஞ்சை மாவட்டத்தில் 4 தோழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். சேலம் சிறையிலே கேரள, தமிழகத் தோழர்கள் 22 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். கடலூர் சிறையில் ஆந்திர, தமிழகத் தோழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பல தொழில்களில் தோழர்கள் வேலை இழந்தனர். மாணவர்கள் பலர் கல்லூரியை விட்டு வெளியேற்றப்பட்டனர். கொள்கைத் தவறால் மக்களிடமிருந்து தனிமைப்பட் டோம். ஆனால் நமது உறுதியையும், தியாகத்தையும் மக்கள் போற்றினார்கள், மதித்தார்கள்.

### புதிய கொள்கை, திட்டம்

1951ல் கட்சிக்குள்ளும் கொள்கைப் போராட்டம் நடந்து, அனுபவ ரீதியாக வெற்றி கண்டது. குறுகிய வறட்டுப் பார்வை நிராகரிக்கப்பட்டது. உலக கம்யூனிஸ்ட் இயக்கமும் கொள்கை ரீதியாக நம்மைத் திருத்த உதவியது. உலக பலாபலத்தில் சோஷலிச முகாமின் கை ஓங்கியிருந்தது. 1951ல் தலைமறைவாக நடந்த கம்யூனிஸ்ட் மாநாடு புதிய திட்டத்தை உருவாக்கிக் கொடுத்தது. நாட்டின் புரட்சி ஒரு ஜனநாயகப் புரட்சி, ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, ஏகபோக எதிர்ப்புப் புரட்சி. இப்புரட்சியில் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், நடுத்தர வர்க்கம் ஆகியோர் இணைந்த ஒரு அணி உருவாக வேண்டும். இதில் (ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் தன்மை கொண்ட பகுதி) முதலாளித்துவ வர்க்கம் நேச சக்தியாக விளங்கும். நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகளை ஐக்கிய முன்னணியில் திரட்டும் கடமை கம்யூனிஸ்ட் கட்சிக்கு உண்டு என்பதாகும்.

1951 முதல் 1962 முடிய நமது கட்சி மூன்று பொதுத் தேர்தல்களில் பங்கு பெற்றது. சட்டமன்றங்கள் நாடாளுமன்றம் ஆகியவற்றில் வெற்றி பெற்று திறம்படச் செயலாற்றியது. கட்சிபல மாநிலங்களில் பலம் பொருந்திய கட்சியாகச் செயலாற்றியது. புதிய அரசியல் சக்தியாக வளர்ந்தது.

### கட்சிப் பிளவு

1951 முதல் 1961 வரை இந்த நிலை உறுதியாக இருந்தது. உலக நிலையில் சோஷலிச முகாம் தீர்மானமான பாத்திரத்தை வகிக்கிறது. இதுபற்றியும் சர்ச்சை உலகரீதியில் கிளம்பியது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி வேறுபட்ட நிலை எடுத்தது. இதை ஒட்டியே இந்திய அரசு பற்றிய மதிப்பீட்டை சீனக்கம்யூனிஸ்ட் கட்சி நம்மீது திணிக்க முயன்றது. உலக கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு எதிராக இந்த நிலையை எடுத்தது.

நமது கட்சிக்குள் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை சரியானது என்று வாதிட்டவர்களும் இருந்தனர். இந்தியாவில் வர்க்க சேர்க்கை, அரசியல் நிலைமை பற்றியும் வேறுபட்ட நிலைகள். உலகில் ஏகாதிபத்தியத்தின் பலாபலத்தை மதிப்பிடுவதிலும் வேறுபட்ட நிலைகள் நிலவின. 1962ல் சீனா நமது நாட்டின் எல்லையில் “பிரதேச உரிமை’ கொண்டாடி., பின்னர் ராணுவத் தாக்குதலையும் தொடுத்தது. இச்சந்தர்ப்பத்தில் நமது கட்சியின் தலை மையில் ஒரு பகுதி தவறான நிலை எடுத்து சீனாவின் நிலையை ஆதரித்தது. அரசியல் தத்துவார்த்த நெருக்கடி முற்றியது. 1964ல் கட்சி பிளவுபட்டது.

### பிளவுக்குப் பின்

1964லிருந்து 1974 முடிய கடந்த 10 ஆண்டுகளில் நமது கட்சியின் நிலை சரியென்று நிரூபிக்கப்பட்டுள்ளது. மார்சியமும் – லெனினியமும் நமக்கு போதித்த விஞ்ஞானத்தை இந்திய நிலைமைக்கேற்ப நமது கட்சி கடைப்பிடித்து வருகிறது. 1930லிருந்து 1964 வரை (35 ஆண்டுகளாக) இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் இயக்கத்தை, அரசியல் கட்சியை ஊடுருவி நின்று குழப்பிக் கொண்டு வந்த தவறான தத்துவ நிலைகள் நீக்கப்பட்டன. கடந்த 10 ஆண்டுகளாக தமது கட்சி இந்திய நாட்டிலும், உலக அரங்கிலும் தனது வர்க்க அரசியல் கடமையை நிறைவேற்றி வருகிறது.

இந்திய மக்களின் முன்னேற்றத்திற்கு சமுதாய மாறுதலுக்கு உழைக்கும் சக்தியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பரிணமித்துள்ளது. பிற்போக்காளர்களை முறியடிக்க முழுமூச்சுடன் செயல்படும், தத்துவ ஆசானாகத் தொழிலாளி வர்க்கம் பக்குவம் பெற்றுள்ளது. இத்தகைய நிலையை உருவாக்கியது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்ட கால போராட்டமாகும். தத்துவம், அரசியல், மக்களின் இயக்கம், இதில் புடம்போட்டு எடுக்கப்பட்ட கட்சி நமது கட்சியாகும்.



**பொருளாதாரப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் ஒன்றுபடுவதைப்போல் வர்க்கம் என்ற உணர்வில் ஒன்றுபட்டு இதரப் பகுதி மக்களையும் ஒன்றிணைத்து அரசியல் போராட்டத்தில் பங்கேற்கச் செய்யும் வகையில் போராட வேண்டும். - லெனின்**

# ‘வேண்டாம் வெறுப்பு அரசியல்’

## பெண்கள் அமைப்புகள் கூட்டறிக்கை!

இந்தியா முழுமையும் ‘ஹிஜாப்’ விவகாரம் பற்றி எரிகிறது !இந்த நிலையில் இதை எப்படி அணுகுவது, புரிந்து கொள்வதுஞ் என்பது குறித்து இந்தியாவின் மிக முக்கிய பெண்கள் அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் கூட்டாக ஒரு அறிக்கை வெளியிடுள்ளனர்.

மாணவர்களிடையே பொருளாதாரரீதியில் வேறுபாடு தெரியக் கூடாது என்பதற்காகத்தான் சீருடை கொண்டுவரப்பட்டது; கலாச்சார ஒற்றுமையை உருவாக்க அல்ல’

ஹிஜாப் அணிந்த முஸ்லிம் மாணவிகளை குறிவைத்து நடக்கும் வெறுப்பு அரசியலை எதிர்த்து, பெண்ணிய அமைப்புகளும், ஜனநாயக அமைப்புகளும், தனிநபர்களும் விடும் கூட்டறிக்கை:

கடலோர கர்நாடக பகுதியில், வகுப்பறையிலும், வளாகத்திலும் ஹிஜாப் அணிவதற்கு தடை என்பதும், அதனை ஒட்டி நடக் கும் மிரட்டல்களும் வெறுப்பு அரசியலும், மாட்டுக்கறி, கூட்டு வழிபாடு, பாங்கு , தொப்பி, உருது என்ற சாக்குகளைச் சொல்லி இந்துத்துவவாதிகள் முஸ்லிம்களை அடித்துக்கொலை செய்தல், பிரித்து வைத்தல், புறக்கணித்தல் போன்றவைகளை செய்துவருகின்றனர்.

அந்த வரிசையில் தற்போது ஹிஜாப் என்ற சாக்கைச் சொல்லி, முஸ்லிம் பெண்களின் மீது தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே, அந்த இந்துத்துவவாதிகள் முஸ்லிம் பெண்களை “இணையதளத்தில் ஏலம்” விட்டார்கள்; அவர்களை பாலியல் ரீதியாக அடிமைப்படுத்தும்படி உரையாற்றினார்கள்.

கர்நாடகா மாநிலம், மாண்டியா பகுதியில் காவித்துண்டு அணிந்த கும்பல் ஹிஜாப் அணிந்த கல்லூரி மாணவியை மிரட்டியுள்ளது. இதன்மூலம் ஹிஜாப் என்ற வேறொரு சாக்கைச் சொல்லி முஸ்லிம்களை தாக்கலாம் என்று நினைக்கிறது.

பள்ளிகளும், கல்லூரிகளும் பன்மைத்துவத்தை வளர்த்தெடுக்க வேண்டுமென்று அரசியல் அமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ளது என்பதை நாங்கள் நம்புகிறோம். சீருடை என்பது, அந்த நிறுவனங்களில் சமமற்ற, வேறுபட்ட பொருளாதார பிரிவினரிடையே நிலவும் வேறுபாடுகளை குறைப்பதற்காக கொண்டு வரப்பட்டது.

பன்மைத்துவம் வாய்ந்த ஒரு நாட்டில் கலாச்சார ஒற்றுமையை கொண்டு வருவதற்காக சீருடை முறை கொண்டுவரப்படவில்லை. அதனால்தான் சீக்கியர்கள் வகுப்பறையிலும் டர்பன் கட்டிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். காவல்துறையிலும், இராணுவத்திலும் கூட அனுமதிக்கப்படுகிறார்கள். இந்து மாணவர்கள் பொட்டு, திலகம், விபூதி போன்ற அடையாளங்களோடு, எந்த விமர்சனமும், எதிர்ப்புமின்றி பள்ளிகள், கல்லூரிகளுக்கு செல்கிறார்கள்.

உடுப்பியில் உள்ள கல்லூரிகளில் ஒன்று, அந்தக் கல்லூரிச் சீருடை நிறத்தை ஒத்த, ஹிஜாப் அணிந்து வர தடையில்லை என்று தெரிவித்துள்ளது. ஹிஜாப் அணிவதால், கல்வி நிறுவனங்களில் பிரச்சினை இல்லை.



மாறாக, காவித் துண்டு அணிந்த இந்துத்துவவாதிகள், ஹிஜாபை தடை செய்யக் கோரி ஆர்ப்பாட்டம் செய்வதால்தான் இப்போது பிரச்சினை எழுந் துள்ளது. சில முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிவதும், காவித் துண்டு அணிவதும் ஒன்று அல்ல. முஸ்லிம் பெண்களை மிரட்டு வதற்காகவும், அதன்மூலம் ஹிஜாப் அணிவதை தடுக்க வேண் டும் என்பதற்காகவே இவர்கள் இப்போது காவித்துண்டு போடு கிறார்கள்.

ஹிஜாப் அணிந்த மாணவிகளை தனி வகுப்பறையில் அமருமாறு செய்வதும், படிக்கும் கல்லூரியை விட்டுவிட்டு முஸ்லிம்கள் நடத்தும் கல்லூரிக்கு செல்லுங்கள் என்று சொல்லுவதும் மதவெறி அரசியலே. இந்துத்துவவாதிகள் 2008 ஆம் ஆண்டிலிருந்தே, கடலோர கர்நாடகாவில் இத்தகைய வன்முறை மூலம் இந்து–முஸ்லிம் மாணவர்கள், நண்பர்கள், காதலர்கள் ஒன்றாக இருப்பதை எதிர்த்து வெறுப்பரசியலை செய்து வருகிறார்கள். இதே போன்ற தாக்குதலை பொது விடுதிகளுக்குச் செல்லும், மேற்கத்திய ஆடை அணியும், முஸ்லிம் இணையரை காதலிக்கும், திருமணம் செய்யும் இந்துப்பெண்கள் மீதும் நடத்துகிறார்கள். இந்துப் பெண்கள் மீதும், இஸ்லாமியர் மீதும் நடைபெறும் இத்தகைய குற்றங்கள், இந்துத்துவ, ஆணாதிக்கவாதிகளால் நடத்தப்படுபவைகளாகும்.

ஹிஜாப் அணிந்த பெண்களின் தொலைபேசி எண்களை விசாரித்து “தீவிரவாத குழுக்களோடு” அவர்களுடைய “தொடர்பு பற்றி விசாரிக்க” உத்தரவிட்டுள்ள கர்நாடக உள்துறை அமைச்சரின் நடவடிக்கை குறித்து நாங்கள் அதிர்ச்சி அடைகிறோம். நேற்றுவரை, பாகு பாடு நிறைந்த குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்துப் போராடியதற்காகவும், வேறுசில பாகுபாடுகளை எதிர்த்தமைக்காகவும் “தீவிரவாதிகள்” என்றும் “சதிச்செயல்” என்றும் குற்றம் சாட்டப்படுகிறார்கள்.

இப்போது இஸ்லாமிய பெண்கள் ஹிஜாப் அணிந்தமைக்காக சதி செய்தவர்கள் என்று கருதப்படுகிறார்கள். இதே நாட்டில்தான், இதே காரணங்களுக்காக இந்துப் பெண்களும், சீக்கியப் பெண்களைப் போல் தலையில் முக்காடு போடுகிறார்கள். இந்தியாவின் முதல் முதன்மை அமைச்சரும், குடியரசுத் தலைவரும் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் புடவையால் தங்கள் தலையில் முக்காடு போட்டிருந்தார்கள்.

மாணவிகளும், பெண்களும் தண்டிக்கப்படாமல் கல்வி பெறும் சூழல் இருக்க வேண்டும். மாணவர்களிடம் என்ன திறமை இருக்க வேண்டும் என்றுதான் கல்வி நிறுவனங்கள் பார்க்க வேண்டுமே ஒழிய, வெளியே என்ன இருக்கிறது என்று பார்க்க வேண்டியதில்லை.

ஜீன்ஸ் அணிந்தாலோ, அரைக்கால்சட்டை அணிந்ததாலோ, ஜிஹாப் அணிந்தாலோ கல்லூரிக்குள் அனுமதிக்கப்படாத மாணவிகளுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம்.

ஹிஜாப் அணிந்தாலும், அணியவில்லை என்றாலும் நாங்கள் இஸ்லாமிய பெண்களுக்கு ஆதரவாக உறுதியோடு இருக்கிறோம். அவர்கள் கண்ணியத்தோடு நடத்தப்பட வேண்டும். அனைத்து உரிமைகளும் அவர்களுக்கு உண்டு. கர்நாட முஸ்லிம் பெண்கள் தாங்களாகவே முன்வந்து ஹிஜாப் அணிகிறார்கள். அது மதிக்கப்பட வேண்டும்.

பெண்கள் எதை அணிய வேண்டும் என்பது அவரவர் ‘விருப்பமாகும்’. பணிவானவரா, பணிவற்றவரா என்பதற்கு இது அளவீடு அல்ல. ஆணாதிக்க மத வழிமுறைகளே எங்கும் சுமத்தப்படுகிறது என்பது உண்மையாகும். மரியாதையோடு நடத்தப்பட வேண்டும் என்றால் இவ்வாறு உடையணிய வேண்டும் என்று பெண்களுக்குச் சொல்லுவதை நிறுத்துங்கள்.

மாறாக, எத்தகைய உடை அணிந்தாலும் அவர்களை மதியுங்கள். “அவளை உடலை அதிகமாகக் காட்டுகிறாள்” என்றோ ”இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ,சீக்கியப் பெண்ணைப் போல” அவள் உடை அணியவில்லை என்று நினைத்தால், அதற்கு உங்களுடைய ஆணாதிக்க மனநிலைதான் பிரச்சினையாகும்; உரிமை சார்ந்த மனநிலைதான் பிரச்சினை. ஆணாதிக்கத்தை எதிர்ப்பதில் ஒவ்வொரு பெண்ணின் வழி என்னவென்பதை அவளே முடிவு செய்துகொள்ளட்டும். அவளுடைய நம்பிக்கைக்கு ஒத்தபடி என்ன நடைமுறைகளை மேற்கொள்வது என்பதை அவளே முடிவு செய்துகொள்ளட்டும்; இதுதான் பெண்ணிய, ஜனநாயக கொள்கைகளாக இருக்க முடியும்.

மாண்டியா முஸ்லிம் பெண் மீது வன்முறையை நடத்திய, ஏவிவிட்ட அமைப்புகள் மீதும், கும்பல் மீதும் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறோம். நாடு முழுவதும் ஹிஜாப் அணிந்த பெண்கள் மீது தொடுக்கும் மிரட்டல்களை தடுக்க அரசாங்கங்கள் காவல்துறைக்கு உரிய வழிகாட்டுதல் அளிக்க வேண்டும். பொதுமக்களும் விழிப்போடு இருக்க வேண்டும்.

அரசின் ஆதரவோடு, இந்துத்துவ மேலாதிக்க அடியாட்கள் தொடுக்கும் மிரட்டல்களை தீரமுடன் எதிர்கொண்டு போராடிவரும் கர்நாடக மாணவிகளை நாங்கள் ஆதரிக்கிறோம். இவர்களின் இந்து, கிறிஸ்தவ நண்பர்களும் இவர்களோடு இணைந்து போராட்டத்திற்கு ஆதரவளிக்கிறார்கள் என்பதைக் கேட்டு மகிழ்வடைகிறோம்.

மாணவிகள், பெண்கள் மீது “இந்த உடை” உடுத்தவேண்டும் என்று கட்டாயப்படுத்தும் ஆணாதிக்கவாதிகளையும், இஸ்லாமிய வெறுப்பை உமிழ்பவர்களையும் எதிர்த்து நிற்க வேண்டும் என்று மாணவர்களையும், குடிமக்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு இந்திய மாதர் தேசிய சம்மேளனம், அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கம், அகில இந்திய முற்போக்கு மாதர் சங்கம் போன்ற மாதர் அமைப்புகளும், மக்கள் சிவில் உரிமைக் கழகம்(றிஹிசிலி) போன்ற 10 ஜனநாயக அமைப்புகளும் கையெழுத்திட்டுள்ளன.

## இந்து மதவெறி சக்திகளின்

# குரூரச் செயல்!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

பள்ளி, கல்லூரிகளில் பயின்று வரும் முஸ்லீம் மாணவிகள் ஹிஜாப், பர்தா மற்றும் புர்கா உடைகள் அணிய தடை விதிக்க வேண்டும் என்ற பெயரில் கர்நாடக மாநிலத்தில் இந்து மதவெறிக் கும்பல் கலகங்களில் ஈடுபட்டு வருகின்றன.

உத்தரப்பிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட ஐந்து மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் சூழலில் கர்நாடகாவில் முஸ்லிம் எதிர்ப்புக் கலகங்கள் நடைபெறுவது, பெரும்பான்மை மக்களின் வாக்குகளை திரட்டுவது என்ற பாஜகவின் மதவெறி அரசியல் சதியின் ஒரு பகுதியாகவே காண முடிகிறது. பாஜகவின் இந்த மலிவான தேர்தல் ஆதாயம் தேடும் நடவடிக்கையில் முஸ்லீம் பெண்களின் ஆடை அரசியல் அடையாளமாக்கப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பு சட்டம் நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் தான் விரும்பும் மதத்தின் மீது நம்பிக்கை வைக்க. அதனை வணங்கி, வழிபட முழு உரிமை வழங்கியுள்ளது. இந்த அடிப்படை உரிமையில் வேறு எவரும் தலையிட்டு, இடையூறு செய்யவோ, தடுக்கவோ வேறு எவருக்கும், அரசுக்கும் உரிமை இல்லை என்பதையும் உறுதி செய்துள்ளது.

ஆனால், பாஜக ஒன்றிய அரசின் அணுகுமுறை அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருந்து, வெகுதூரம் விலகி சென்றுள்ளது. “இந்து ராஷ்டிரம் “ என்ற கற்பிதக் கருத்தை பலவந்தமாக கட்டமைக்கும் நடவடிக்கையில் ஈடுபடு வதை பல்வேறு நிகழ்வுகள் வெளிப்படுத்தி வருகின்றன. அது தற்போது கர்நாடக மாநிலத்தில் தீவிரமாக செயல்படுகின்றது.

கர்நாடக மாநில அரசு பாஜக தலைமையில் செயல்படுவதால் பள்ளி, கல்லூரி மாணவர்கள் நெஞ்சில் மத வெறி நஞ்சு கலந்து, நாட்டை ரத்தக்களரியில் தள்ளும் கலவரங்களை அனுமதித்து வருகிறது.

ஒரு மாணவியை நூற்றுக் கணக்கான மாணவர்கள் சூழ்ந்து கொண்டு “ஜெய்ஸ்ரீராம்“, என கோஷமிட்டு பாடசாலைகளில் உள்ள கொடிக் கம்பங்களில் காவிக் கொடி ஏற்றி கூச்சலிடுவதும், இந்த வன்முறை நிகழ்வுகளை மாநில அமைச்சர்கள் நியாயப் படுத்தி பேசி வருவதும், இருபதாம் நூற்றாண்டில் மனிதகுல விரோதி, பேரினவெறியன் ஹிட்லர் கடைப்பிடித்த, ஜனநாயக அழித்தொழிப்பு நடவடிக்கையின் இந்திய வடிவமாக வெளிப்படுகிறது.

அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும், மதச்சார்பற்ற வாழ்க்கை நெறி பண்பாட்டுக்கும் எதிராக மதவெறி அரசியல் நடத்தி வரும் பாஜகவின் மலிவான நடவடிக்கைகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

வேற்றுமையில் ஒற்றுமை பேணும் பண்புக்கும், நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கும் எதிராக செயல்படும் ஆர்எஸ்எஸ், பாஜக மற்றும் இந்து மதவெறிக் கும்பல்களுக்கு எதிராக மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி, தேச பக்த சக்திகள் ஓரணியில் திரண்டு போராட முன் வர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## அரியாங்குப்பம் பள்ளியில் ஹிஜாப் அணியக் கூடாது என கட்டாயப்படுத்தாதீர்




### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

புதுச்சேரி மாநிலம், அரியாங்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளி முதல்வரிடம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர்கள் வி.எஸ்.அபிஷேகம், து.கீதநாதன், நிர்வாகக்குழு உறுப்பினர் பூ.சரளா, தொகுதிசெயலாளர் சு.சுகதேவ் ஆகியோர் அளித்துள்ள மனுவில் கூறியுள்ளதாவது:

அரியாங்குப்பம்பகுதி மக்கள் காலம் காலமாகவே பல மதங்கள், பல இனங்கள், பல மொழிகள் பேசினாலும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர் என்பதை தங்களுக்கு நினைவூட்டுகிறோம். இந்நிலையில் சில நாட்களுக்கு முன் தங்கள் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அரியாங்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் இஸ்லாமிய மாணவியிடம் தாங்கள் ஹிஜாப் அணிந்து இனிமேல் பள்ளிக்கு வரக்கூடாது என்று கட்டாயப்படுத்தி உள்ளீர்கள்; இது தவறுதலாக நடந்த விட்டதாக தாங்கள் கூறியுள்ளீர்கள். இச்சம்பவம் ஏற்கக் கூடியதல்ல. இது திட்டமிட்டு நடத்தப்பட்ட தாகவே கருதுகிறோம். எதிர்காலத்தில் இவ்வாறு நடந்து கொள்ளாத வகையில் தாங்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.

## அரசுசாரா பட்ட மேற்படிப்பு மருத்துவ மாணவர்களுக்கு உதவிடும் வகையில்

# அரசாணையை நடைமுறைப்படுத்திட உத்தரவு

## தமிழ்நாடு அரசுக்கு சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் நன்றி

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளில், மருத்துவப் பட்டயபடிப்பை **(PG Diploma)** ஏற்கனவே முடித்து விட்டு, மீண்டும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் **MD/MS** போன்ற முதுநிலை மருத்துவப் படிப்பில் இவ்வருடம் சேர்ந்துள்ள அரசு சாரா **(Non Service)** மருத்துவ மாணவர்களிடம் ஏற்கனவே அரசுவெளியிட்ட அரசாணைக்கு (13.04.2020 தேதியிட்ட அரசாணை எண் 185 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை), எதிராக, ரூ 20 லட்சம் வங்கி பாதுகாப்பு **(BANK GUARANTEE)** தந்தால் மட்டுமே கல்லூரியில் சேரமுடியும் என வற்புறுத்திப் பெறப்பட்டுள்ளது. இதனால் பல மருத்துவ மாணவர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர். பலர் வங்கியில் ரூ 20 லட்சம் வரை செலுத்தி உள்ளனர். இது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. அதை திருப்பி வழங்கிட வேண்டும்.

இந்நிலையில், தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் முதுநிலை மருத்துப் படிப்பை படித்து முடித்த மருத்துவர்கள் பலர், உயர் சிறப்பு மருத்துவப் படிப்பில் சேர , உயர் சிறப்பு மருத் துவப் படிப்பிற்கான நீட் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று காத் திருக்கின்றனர்.

அவர்கள் மீண்டும் தமிழ்நாட்டின் அரசு மருத்துவக் கல்லூரிகளிலேயே உயர் சிறப்பு மருத்துவப் படிப்பில் சேர்வதாக இருந்தாலும், ரூபாய் 40 லட்சம் வரை வங்கி பாதுகாப்பு **(BANK GUARANTEE)** பெறவேண்டும் என கூறப்பட்டது.

அதாவது, சென்ற வருடம் முதுநிலை மருத்துவப் படிப்பை முடித்து, 2 ஆண்டு காலம் கட்டாய சேவை முடிக்காதவர்கள் அவ்வாறு ரூ 40 லட்சத்தை வங்கியில் பாதுகாப்புத் தொகையாக செலுத்திட வேண்டும் எனக் கூறப்பட்டது.

இதனால், பலர் தமிழகத்தில் உயர் சிறப்பு மருத்துவ இடம் கிடைத்தாலும் மேல் படிப்பில் சேர இயலாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், மருத்துவர்களுக்கு ரூ 40 லட்சம் பாதுகாப்பு தொகையை செலுத்த கட்டாயப்படுத்தக்கூடாது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் , 13.04.2020 தேதியிட்ட அரசாணை எண் 185 யை தொடர்ந்து நடைமுறைப் படுத்த வேண்டும் எனக் கோரப்பட்டது.

அவர்கள் படித்து முடித்தபின் அந்தகட்டாயச் சேவைக்கான பணியையும் இரண்டு ஆண்டுகளுக்குள் அல்லது பத்திரத்தில் உள்ளபடி அந்தந்த மாணவர்களுக்கு உரியகாலக் கெடுவுக்குள் வழங்கவேண்டும். இல்லை எனில், சான்றிதழ்கள் அனைத்தையும் தொடர்புடைய மருத்துவர்களிடம் திருப்பி வழங்கிட வேண்டும்.

அதே போன்று, முதுநிலை அல்லது டிப்ளமோ படிப்பை முடித்து விட்டு, கட்டாய சேவைக்காக காத்திருக்கும் மருத்துவர்கள் பலருக்கு இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக கட்டாய சேவைக்கான வேலைவாய்ப்பு வழங்கப்படாமல் உள்ளது. இந்நிலையில் அம்மாணவர்களுக்கு வேலை வழங்க வேண்டும் அல்லது உடனடியாக அவர்களின் வாழ்வாதாரம் காக்க ,ஒரிஜினல் சான்றிதழ்களை வழங்கிடவேண்டும் எனவும், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தைச் சேர்ந்த முதுநிலை மருத்துவப் படிப்பை முடித்த அரசு சாரா மருத்துவர்கள் சார்பில், தமிழ்நாடு அரசுக்கு, மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் அவர்களை 09.02.2022 அன்று நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

இந்நிலையில் அக்கோரிக்கைகளை ஏற்று தமிழ்நாடு அரசு, அரசு கல்லூரிகளில் மருத்துவப் படிப்பை முடித்த, அரசுசாரா மருத்துவர்களுக்கு உதவும் வகையில், உத்தரவை உடனடியாக 10.2.2022 அன்று பிறப்பித்துள்ளது.

தமிழக அரசின் இந்நடவடிக்கையை சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மனமாற வரவேற்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 58. தனிமை இனிமை தாரா

**தனிமனிதன் என்னும் உணர்விலாஅன் னானை**
**தனிமனிதன் என்றே துதி.**

தான் மற்றவர்களைக் காட்டிலும், தனித்தன்மை வாய்ந் தவன் என்ற எண்ணம் (செருக்கு) கூடாது. தன் னைச் சமுதாயத்தில் ஒருவன் என்றே கருத வேண் டும். அப்படிக்கருதுபவன் தனிப்புகழ் பெற்றவன் ஆவான்.

**தனிமை இனிமை தருமா துணிமை**
**அருமை தருமா துணி.**

ஆய்ந்து பார்த்தால், சமூகத்தில் இருந்து விலகித் தனிமனிதனாக வாழ்வது இனிமை உண்டாக்காது. விலகி இருப்பதனால் அரிய செயல்களைச் செய்து விடவும் முடியாது.

## வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

2022 நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடும் தொகுதிகள் மற்றும் வேட்பாளர் பட்டியல் ஜனசக்தியில் வெளிவந்தது. இதில் திருவாரூர், தருமபுரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி போன்ற மாவட்டங்கள் ஏன் இடம்பெறவில்லை. பட்டியல் தொடர்கிறதா?

– **ஆர்.செந்தாமரை,** தென்சென்னை

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஏழைகளுக்கு எதிரான கார்ப்பரேட்களுக்கு ஆதரவான பட்ஜெட் என்ற பொதுச் செயலாளர் டி.ராஜா அவர்களின் கட்டுரை பட்ஜெட்டின் முகமூடியை கிழித்தெறிகிறது. சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களுக்கும் துரோகம் இழைத்துள்ளது பட்ஜெட். இதை எதிர்த்து அனைவரும் கொதித்தெழவேண்டும் என்று அறைகூவி அழைத்திருப்பதை அனைத்து பகுதி மக்களும் செயல்படுத்த வேண்டும்.

– **ஜி.சங்கர நாராயணன்,** நன்னிலம்.

**ஆசிரியர் ஜனசக்தி,**

வெற்றி ஒன்றே குறிக்கோள். அதை அடைய நமது தோழர்கள் தனக்குள்ள பல்வேறு பணிகளை சில நாட்கள் மட்டும் ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் கரம் கோர்த்து செயல்படுவதன் மூலம் இதை சாத்தியமாக்க முடியும் என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கூறியிருப்பது மிகவும் பொருத்தமானது.

**பி.எஸ்.சஞ்சீவ்குமார்,**
திருப்பூர்

**ஆசிரியர் ஜனசக்தி,**

‘தீயோடு விளையாட வேண்டாம் ஆளுநரே திரும்பிப்போ’ என்ற த.லெனின் அவர்கள் எழுதிய கட்டுரை படித்தேன். ஆளுநரின் அத்துமீறிய செயலுக்கு சாட்டையடி கொடுக்கிறது. படித்தேன் கொதிப்பு இன்னும் அதிகமாகிறது. ஒன்றிய அரசு இதை புரிந்து கொண்டு மாநில அளுநரை திரும்பப் பெற வேண்டும்.

**அசோகன்,**
திருவாரூர்.




# வாக்கு சேகரிப்பு

## மதுரை மாநகராட்சி - 26




மதுரை மாநகராட்சி 26வது வார்டில் போட்டியிடும் க.முத்துசுமதி அவர்களுக்காக திமுக தலைமையிலான காங்கிரஸ், மார்க்சிஸ்ட் மற்றும் கூட்டணி கட்சியினர்களுடன் இரா.முத்தரசன் அவர்கள் கலந்து கொண்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

## திருச்சி மாநகராட்சி -23




மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண் 23 ல் போட்டியிடும் க.சுரேஷ் குமார் அவர்களை ஆதரித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தில்லைநகர் காந்திபுரம் பகுதியில் வாக்கு கேட்டு உரையாற்றினார். திமுக வட்ட செயலாளர் ரவி, துணைச் செயலாளர் பத்மநாபன், பிரதிநிதி சண்முகம் முன்னிலை வகித்தனர்.

காங்கிரஸ் கட்சி மனோகரன் மார்க்சிஸ்ட் கட்சி ஸ்ரீதர், மதிமுக வெல்லமண்டி சோமு விடுதலை சிறுத்தைகள் சரவணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செல்வராஜ் மற்றும் திராவிட மணி, சிவசூரியன் முன்னாள் மாமன்ற உறுப்பினர் புஷ்பம் உள்ளிட்டோரும் பங்கேற்று உரையாற்றினர்.

## அம்மாபேட்டை பேரூராட்சி-14




அம்மாபேட்டை பேரூராட்சியில் 14 வது வார்டு உறுப்பினர் பதவிக்கு திமுக சார்பில் போட்டியிடும் கௌரிக்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அம்மாப் பேட்டை கிளை சார்பில் வாக்கு சேகரிக்கப் பட்டது. கிளைச் செயலாளர் எம். ராஜாமாணிக்கம் தலைமையில் அம்மாப் பேட்டை இந்தியக் கம்யூனிஸ்ட் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் எஸ். உத்திராபாதி , டி.ராமலிங்கம் உள்பட ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டு வீடு, வீடாக வாக்குச் சேகரித்தனர்.

## சேத்தூர் பேரூராட்சி



விருதுநகர் மாவட்டம் சேத்தூர் பேரூராட்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முருகேஸ்வரி, கனகரத்தினம், பூமாரி, சரஸ்வதி, கற்பககனி உள்ளிட்டோர் திமுக கூட்டணியில் போட்டியிடுகிறார்கள். இவர்களுக்கு கதிர்அரிவாள் சின்னத்திற்கு வாக்கு கேட்டு கூட்டணி கட்சியினர் வீடு வீடாக வாக்கு கேட்டு வருகிறார்கள். சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, ஒன்றிய செயலாளர் வீராச்சாமி, ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் லி.பகத்சிங், இளைஞர் மன்ற மாவட்ட செயலாளர் கணேசமூர்த்தி, தவிச அய்யணன், நகர செயலாளர் ராஜா உள்பட ஏராளமான பெண்கள் வாக்காளர்களிடம் வாக்கு கேட்டு வருகிறார்.

## பரமக்குடி நகராட்சி



பரமக்குடி நகராட்சி தேர்தலில் திமுக தலைமையிலான கூட்ட ணியில் 10 மற்றும் 15 வது வார்டுகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடுகிறது. 10 வது வார்டில் என் எஸ் பெருமாள், 15 வது வார்டில் டாக்டர் வரதராஜன் ஆகியோர் வாக்காளர்களைச் சந்தித்து வாக்கு சேகரித்தனர். தி.மு.க, காங்கிரஸ், சிபிஎம் மற்றும் பொதுமக்களும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



# மணப்பாறையில் இரா.முத்தரசன் வாக்கு சேகரிப்பு

மணப்பாறை நகரில், மதச்சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணியில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 19 வது வார்டில் போட்டியிடும் த.தங்கமணிக்கும், 2 வது வார்டில் போட்டியிடும் த.மனோன்மணிக்கும் கதிர் அறிவாள் சின்னத்தில் வாக்கு கேட்டு வீடு விடாக சென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் வாக்கு சேகரித்தார்.

நிகழ்ச்சியில் புறநகர் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித், நகர செயலாளர் ஜனசக்தி உசேன், ஒன்றியச் செயலாளர்கள் மணப்பாறை தங்கராசு, வையம்பட்டி சண்முகானந்தம், மருங்காபுரி வெள்ளகண்ணு உட்பட மாவட்ட நகர ஒன்றிய குழு நிர்வாகிகள் கலந்துகொண்டு வாக்கு சேகரித்தனர். முன்னதாக 18வது வார்டு தி.மு.க. வேட்பாளர் அருந்ததிக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டார். நகர்ப்புற உள்ளாட்சி துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது, ஒன்றிய பெருந்தலைவர் அமிர்தவல்லி ஆகியோருடன் மணப்பாறை நகராட்சியின் 27 வார்டுகளின் வேட்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் பங்கேற்று உரை நிகழ்த்தினார்.

# கோவையில் அமைச்சர் செந்தில் பாலாஜி வாக்கு சேகரிப்பு



கோவை மாநகராட்சி 48 வது வார்டு உறுப்பினர் பதவிக்கு ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் வேட் பாளராக, இந்திய கம்யூனிஸ்ட் கட் சியைச் சேர்ந்த பிரபா ரவீந்திரன் போட் டியிடுகிறார்.

இவரை ஆதரித்து மின்சாரம், கலால் மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி சித் தாபுதூர் வி.கே.கே. மேனன் சாலையில் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவருடன் திமுக மாவட்ட செயலாளர் ந.கார்திக், சிபிஐ மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம், மாவட்ட துணை செயலாளர் ஆர்.தேவராஜ் ஆகியோர் உடனிருந்தனர். தி.மு.க. சசிகுமார், கேபிள் ராஜேந்திரன், கதிரவன், தனபால், தண்டபாணி, பகுதி கழக செயலாளர் நாகராஜ்.

சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப் பினர் ஆர்.சுதர்சன், பி.முருகன், மற் றும் கே.ரவீந்திரன், ஆனந்தன், ராஜேந் திரன், கண்ணன், காங்கிரஸ் கட்சியின் சௌந்தர் ராஜன், செபஸ்டியன், சண்முகராஜ், கதிரவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வராஜ், ரமணி, சிவகுமார். மதிமுக ரங்கநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆண்டிபட்டி பேரூராட்சி-10



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆண்டிபட்டி பேரூராட்சி 10 வது வார்டில் ல் போட்டியிடும் தோழர் மீனாட்சி முனீ ஸ்வரன் அவர்களுக்கு ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஏ.மகாராஜன், திமுக ஒன்றிய செயலாளர் பி.ராஜாராம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே.பரமேஸ்வரன், ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி கட்சி தோழர்களுடன் வாக்கு சேகரித்தனர்.

## வேலூர் மாநகராட்சி-54



வேலூர் மாநகராட்சி 54ஆவது வார்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எஸ்.காவேரி போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து விருப்பாச்சிபுரம் பகுதி மக்களிடம் வாக்குகள் சேகரிக்கப்பட்டது. இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.லதா, எல்.மணி ஆகியோர் தலைமையிலும், மாநகர செயலாளர் அ.ஏழுமலை, த.அருள்குமார், ரே. தசரதன், பேரணாம்பட்டை சேர்ந்த தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் நா.சே.தலித்பாஸ்கர் முன்னிலையிலும் மக்களிடையே வாக்குகள் சேகரிக்கப்பட்டது.

# ரெ.மாணிக்கம் படத்திறப்பு



தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு ஒன் றியம், ஆம்பலாப்பட்டு வடக்கு தேத் தாடிக்கொல்லை மறைந்த மூத்த தோழர் ரெ.மாணிக்கம் அவர் களின் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் முத்து உத்தி ராபதி தலைமையில், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் த.லெனின் திருவுரு வப்படத்தை திறந்து வைத்தார். சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் வீ.கல்யாணசுந்தரம், மாவட்டக்குழு உறுப்பினர் சோ.பாஸ்கர், அதிமுக முன் னாள் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் கவி, ஆசிரியர் இராமலிங்கம், மா.பாலு, சிபிஐ கிளைச் செயலாளர் ஜீவானந்தம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## ஒரத்தநாடு பேரூராட்சி-3



ஒரத்தநாடு பேரூராட்சி 3 வது வார்டு மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வி.எஸ்.சேகர் அவர்களுக்கு கதிர் அரிவாள் சின்னத்தில் வாக்கு சேகரிப்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் சீனி முருகையன் தலைமையில் கூட்டணி கட்சிகளின் ஒன்றிய நிர்வாகிகள் சி.மோகன்தாஸ் (காங்கிரஸ்), கோவிந்தராசு சிபிஐ ( எம்) ஒன்றிய செயலாளர், மணிவண்ணன் மதிமுக ஒன்றிய செயலாளர் ஆகியோர் முன்னிலையில் திமுக ஒன்றிய செயலாளர் ஜெ.கார்த்திகேயன் துவக்கி வைத்து பேசினார். இதில் அ.பன்னீர்செல்வம், சக்திவேல், தி.திருநாவுக்கரசு, த.கிருஷ்ணன், சி.ராமலிங்கம், மா.பாலு, மு.ராஜேந்திரன் ஆகியோர் மற்றும் கூட்டணி கட்சியை சேர்ந்தவர்கள், பொதுமக்கள் திரளானோர் பங்கேற்று வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர்.

# முதல் பட்டியலின பெண் மேயரை தேர்ந்தெடுக்கும் சென்னை

நாட்டிலேயே மிகவும் பழமையான மாநகராட்சிகளில் ஒன்றான சென்னை, முதல்முறையாகப் பட்டியலினத்தைச் சேர்ந்த பெண் ஒருவரைத் தனது மேயராக தேர்ந்தெடுக்க உள்ளது. தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பிப்ரவரி 22இல் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. சென்னை உட்பட 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் என மொத்தம் உள்ள 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்பட உள்ளது.

**மகளீர்:** பெண்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தின்படி சென்னை மாநகராட்சியில் உள்ள 200 வார்டுகளில் 100 வார்டுகள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை மட்டுமின்றி தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளில் 50% பெண்களுக்கே ஒதுக்கப்பட்டு உள்ளது.

**திருமாவளவன் கோரிக்கை:** அதேபோல கடந்த 2019ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தொகுதி வரையறை பணிகள் நடைபெற்று வந்த போதே விசிக தலைவர் திருமாவளவன் சென்னை மாநகராட்சியைப் பட்டியல் இனத்தவருக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். சென்னையின் ஆதிக்குடிகள் நகரை விட்டே விரட்டியடிக்கப்படுவது தொடர்ந்து வருவதாகவும் அத்தகையப் பூர்வக்குடிகளின் பிரதிநிதித்துவத்தை நிலைநாட்டும் வகையில் சென்னையை தனித்தொகுதியாக அறிவிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். இது தொடர்பாக அப்போது முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமியிடம் திருமாவளவன் நேரில் சென்று வலியுறுத்தினர்.

**பட்டியலின பெண்கள்:** இந்தச் சூழலில் திமுக ஆட்சி அமைந்த பிறகு, வெளியான தொகுதி வரையறை அறிவிப்பில் சென்னை மாநகராட்சியின் மேயர் பதவியை பட்டியலினத்தைச் சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதேபோல புதிதாக உருவாக்கப்பட்ட தாம்பரம் மாநகராட்சி, மற்றும் ஆவடி மாநகராட்சியும் பட்டியலின பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. திண்டுக்கல், காஞ்சிபுரம், கடலூர், கரூர், வேலூர், சிவகாசி, மதுரை, ஈரோடு மற்றும் கோவை மாநகராட்சிகள் பொதுப் பிரிவு பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

**முக்கியம்:** இதில் சென்னை மாநகராட்சி மிகவும் முக்கியமானது. தமிழ்நாட்டின் தலைநகராகவும் நாட்டின் மிக முக்கியமான நகரங்களில் ஒன்றாக உள்ள சென்னையின் மேயர் பதவி பட்டியலின பெண்ணுக்கு வருவது பல மாற்றங்களுக்குத் தொடக்கப் புள்ளியாக அமையலாம். ஏனென்றால் சென்னை மேயர் என்பது மிகவும் முக்கியமான ஒரு பதவி ஆகும். இன்றைய முதல்வர் ஸ்டாலின், மருத்துவத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் ஆகியோர் இதற்கு முன்பு சென்னை மேயராக இருந்தவர்கள் தான்.

**நேரடி போட்டி:** பல ஆண்டுகள் தாமதத்திற்குப் பின்னர் இப்போது தேர்தல் நடைபெறும் நிலையில், மொத்தம் 200 வார்டுகளை கொண்ட சென்னை மாநகராட்சியில் 150க்கும் மேற்பட்ட இடங்களில் திமுக மற்றும் அதிமுக நேரடியாக மோதுகிறது.

**கடந்த கால பெண்கள்:** அதேநேரம் சென்னை மநகராட்சிக்கு பெண் ஒருவர் மேயராக தேர்ந்தெடுக்கப்படுவது இது ஒன்றும் முதல்முறை இல்லை. ஏற்கனவே, 1957இல் தாரா செரியன், 1971ஆம் ஆண்டில் காமாட்சி ஜெயராமன் என இரண்டு பெண் மேயர்கள் சென்னைக்கு இருந்துள்ளனர். இருப்பினும், இந்த முறை சென்னை மாநகராட்சி பட்டியலினத்தைச் சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது, பெரிய மாற்றத்திற்கான தொடக்கமாகக் கூட இருக்கலாம் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

# மீனவப் பஞ்சாயத்தாரால் ஊர் விலக்கம் செய்யப்பட்ட குடும்பத்தைப் பாதுகாத்திடுக!

## மீனவர் சங்கம் ஆட்சியரிடம் மனு



நாகை மாவட்டம், செருதூர் மீனவர்கள் கிராமத்தை சார்ந்த முத்துக்குமரன், பத்மினி ஆகியோரின் மகன் மீனவர் எம். நித்தியானந்தன் மீது, செருதூர் மீனவர் பஞ்சாயத்தாரால் பொய் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, மனித மாண்பையும் மீறி, சட்டத்திற்கு புறம்பாக கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லக்கூடாது, யாரிடமும் பேசவோ, பழகவோ கூடாது, கடைகளில் எந்த பொருள்களும் வழங்கக் கூடாது,

ஒரே குடும்பத்தில் உள்ள அனைவரும் பிரிந்து இருக்க வேண் டும் என்பன உள்ளிட்ட கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இதனால் தற்போது நித்யானந்தத்தின் குடும்பத்தினர் அன்றாட வேலை இழப்பு, பொருளாதார இழப்புக்கு ஆளாக்கப்பட்டு வறுமையில் வாடி வருகின்றனர்.

அக்குடும்பத்தினரை பாதுகாக்க வலியுறுத்தியும், தமிழக முதல்வர் உள்ளிட்ட சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் மனு கொடுக்கப்பட்டு பத்து மாத காலமாகியும் தமிழக அரசோ, அல்லது அதிகாரிகளோ, இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே இரு தரப்பினரையும் அழைத்துப் பேசி சுமூக நிலையை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு ஏஐடியுசி மீனவத் தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் பி.சின்னதம்பி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வி.சரபோஜி, தமிழ்நாடு ஏஐடியூசி மீனவத் தொழிலாளர் சங்கத்தின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.காளிமுத்து மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் நாகை மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தனர்.

# கட்டட தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிடுக!



தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் திருச்சி மேற்கு தொகுதி உட்பட்ட 25வது வட்ட அமைப்புக் குழு கூட்டம் கிளைத் தலைவர் எம்.சுமதி தலைமையில் கொடாப்பில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்க திருச்சி மாவட்ட செயலாளர் சி. செல்வகுமார் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். பகுதிக் குழு தலைவராக பி.மகேஸ்வரி, துணைத் தலைவராக பி.ரேவதி, பகுதிக் குழு செயலாளராக எம்.சுமதி, துணைச் செயலாளராக எம்.எஸ்.பிரசாத், பகுதி குழு பொருளாளராக பி.கங்காதேவி ஆகியோர் ஒருமனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூட்டத்தில் திருச்சி மாநகர் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் கே.அண்ணாதுரை, மாவட்ட துணைச் செயலாளர் எம்.ஆர்.முருகன், துணைத் தலைவர் எம்.மருதம்பாள், எஸ்.முத்தழகு, எஸ்.முத்துலெட்சுமி, டி.நிர்மலா ஆகியோர் உரையாற்றினர். பி.ரேவதி நன்றி கூறினார். கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு பெண்களுக்கு 50 வயதிலும் ஆண்களுக்கு 55 வயதிலும் மாதம் மாதம் ரூபாய் 6000 ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சிங்காரவேலர் 75வது நினைவு தினம்

# மு.வீரபாண்டியன் மாலை அணிவித்து மரியாதை




சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களின் 75 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு உள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். வடசென்னை மாவட்டம் சார்பாக மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பாக மாநில செயலாளர் கீ.சு.குமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். துறைமுகம் பகுதி செயலாளர் மு.வரதன், விவசாய தொழிலாளர் சங்க திருவள்ளூர் மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், நிர்வாகக் குழு உறுப்பினர் பீ.கருணாகரன், ராமசந்திரன், 36 வட்ட செயலாளர் பி.பாபு ராவ், கே.போஸ், ஆர்.பஞ்சநாதன், ஜா.பூபாலன், ஐ.உசேன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.




# விருதுநகரில் சிங்காரவேலர் நினைவு நாள் மலரஞ்சலி

விருதுநகரில் சிபிஐ மாவட்ட குழு அலுவலகத்தில் , தமிழ்நாடு எஐடியுசி மீனவர்கள் சங்க மாவட்ட குழு சார்பில் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் 75வது நினைவு நாள் கூட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் செல்வம் தலைமை வகித்தார். மாவட்ட பொருலாளர் ரெஜினாமேரி முன்னிலை வகித்தார். சிபிஐ மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார், தஓவாஇ முருகேசன் உள்ளிட்டோர் சிங்காரவேலர் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி வீர வணக்கம் செலுத்தினார்கள்



# இளைஞர் பெருமன்ற கொடியேற்று விழா

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், அம்பேத்கர் நகரில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற கிளை தொடக்க விழா கிளைச் செயலாளர் பாலாஜி தலைமையில் நடைபெற்றது.

மன்றத்தின் பெயர்ப் பலகையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவள்ளூர் மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன் திறந்து வைத்தார்.

இளைஞர் பெருமன்ற மாநிலத் தலைவர் த.கு.வெங்கடேஷ் கொடியேற்றி வைத்து சிறப்புரையாற்றினார். இதில் வி.தொ.ச. மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், மாவட்ட துணைத் தலைவர் கே.போஸ், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் பி.வி.செந்தில், மாவட்டக்குழு உறுப்பினர்கள் வி.இ.இராஜீவ்காந்தி, வெங்கடேச பெருமாள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பிள்ளையார் நகர் கிளை மாநாடு

சேலம்மாவட்டம், அஸ்தம்பட்டி மண்டலம், பிள்ளையார் நகர் கிளை மாநாடு எல்.கணேசன் தலைமையில் நடைபெற்றது. மண்டல செயலாளர் ஆர்.எல். முத்துராஜகோபால் அரசியல் விளக்க உரையாற்றினார். கிளைச் செயலாளராக பிரபாகரன், துணைச் செயலாளராக எல்.கணேசன், பொருளாளராக பி.அம்பிகா தேர்வு செய்யப்பட்டனர்.



# பாபநாசம் ஏ.குருசாமி முதலாமாண்டு நினைவேந்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கட்சியின் செந்தொண்டர் படைத் தளபதி தோழர் ஏ.குருசாமி முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி பாபநாசம் அருகே அம்மாபேட்டையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளர் ஆர்.செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஆர்.எஸ்.பாலு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஒன்றியச் செயலாளர் எம்.வெங்கடேசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.எம்.குருமூர்த்தி, ஒன்றிய நிர்வாகிகள் எஸ்.உத்திராபதி, எஸ்.திருநாவுக்கரசு, எம்.ராஜாமணிக்கம், டி.ராமலிங்கம், டி.ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டுக் வீரவணக்கம் செலுத்தினர்.

## தமிழக பாசன வரலாறு

தமிழகத்தில் காவிரி, தாமிரபரணி ஆறுகளை தவிர வற்றாத ஜீவநதிகள் என்று பெரிதாக ஏதும் இல்லை. ஆனால் தமிழகம் விவசாயத்தில் சிறந்து விளங்குகிறது. இது எவ்வாறு சாத்தியமானது என்றால். நமது முன்னோர்கள் கிடைத்த நீரை முறைப்படுத்தி, முழுமையாக பயன்படுத்தி இருக்கிறார்கள். இதனால்தான் தமிழர்கள் விவசாயத்தில் சாதிக்க முடிந்திருக்கிறது என்கிற விவரத்தை. “ தமிழக பாசன வரலாறு “ என்ற நூலில் முனைவர் பழ.கோமதிநாயகம் அவர்கள் மிகத் தெளிவாக எழுதியுள்ளார்.

பாசன கட்டமைப்பு என்று வரும்போது கரிகாலன் உருவாக்கிய கல்லணை இன்றுவரை இருக்கிறது. எகிப்து நாட்டில் கல்லணைக்கு பல ஆண்டுகளுக்கு முன்பே ஒன்றுக்கு மேற்பட்ட நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டு இருந்தாலும், அவை எதுவும் இன்று பயன்பாட்டில் இல்லை. காலப்போக்கில் அழிந்துவிட்டன. அணைக்கட்டுகள் போன்ற நீரில் கட்டுமானங்களை கட்டினோம்.எனவே இந்த மகத்தான சாதனை புரிந்த பெயர் தெரியாத அந்நாளைய மக்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்“. என கல்லணையை கட்டிய வர்களுக்கு சர் ஆர்தர் காட்டன் நன்றி கூறி உள்ளது தமிழர்களுக்குப் பெருமை அல்லவா?. இந்த சர் ஆர்தர் காட்டன் தான் முல்லைப் பெரியாறு அணையை வடிவமைத்தவர்.




உலகத்தின் நாகரிகங்கள் எல்லாம் நதிக்கரைகளில் தான் தோன்றின. இந்த நாகரீக நாடுகளிலெல்லாம் எவ்வாறு பொறியியல் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி நீர் மேலாண்மை செய்யப்பட்டது என்பதையும் இந்நூல் பேசுகிறது.

ஐரோப்பாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் ஏரிகளில் மதகுகள் அமைக்கப்பட்டன. ஆனால் தமிழர்கள் ஏரிகளுக்கு மதகுகளை 2100 ஆண்டுகளுக்கு முன்பே வடிவமைத்தனர். இதற்கு பல சான்றுகளையும் நூலாசிரியர் கொடுத்துள்ளார்.

ஏரிகள், குளங்கள் போன்ற நீர் நிலைகள் கிராம பொது சொத்துகள் ஆக இருந்தன. அவற்றை பராமரிப்பதிலும் நிர்வகிப்பதில் விவசாயிகளுக்கு மட்டுமின்றி சலவைத் தொழிலாளர், மீன் பிடிப்போர் மற்றும் கால்நடை வளர்ப்போர் போன்று ஏரி நீரை பயன்படுத்துவோர் அனைவருக்கும் உரிமை இருந்தது. ஏரி நீரை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்தி விடாமல் கால்நடைகளுக்கான தண்ணீரை மிச்சம் வைக்கும் பழக்கம் இருந்தது. இவ்வாறு சேமிக்கப்படும் நீரை சமூகம் முழுவதும் சரிசமமாக பங்கிடும் முறை இருந்தது என்பதை இந்நூல் விளக்குகிறது. நீர் மேலாண்மை யிலும், பாசனக் கட்டுமானங்களை உருவாக்குவதிலும் தமிழகம் முன்னோடியாக இருந்ததையும் இந்நூல் வழி அறிய முடிகிறது. தமிழக பாசன வரலாறு என்கிற நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும்.

– இன்சுவை பாரதி

**நூலாசிரியர் : முனைவர் பழ.கோமதிநாயகம்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ்,142. ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 14, செல்: 044 28482441**
**பக்கங்கள் : 130 விலை : ரூ.120**

# நூல் நயம்

## பகத்சிங் கட்டுரைகள் கடிதங்கள்

பகத்சிங் என்கிற பெயர் இந்திய இளைஞர்களை கிளர்ந்தெழ செய்யக்கூடிய ஒரு பெயர். இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஆகச்சிறந்த ஆதர்சம் அவர். அவரது கட்டுரைகளும் கடிதங்களும் எஸ்.ஏ. பெருமாள் அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, இந்நூல் வெளிவந்திருக்கிறது.

இந்துஸ்தான் சோசலிச குடியரசு கழகத்தின் அரசியல் வழிகாட்டியாக விளங்கியவர். மார்க்சிய லெனினிய கோட்பாடுகள் பற்றியும், மகத்தான அக்டோபர் சோசலிசப் புரட்சி பற்றியும் ஆழ்ந்த ஞானமும், அறிவும் பெற்றிருந்தார். இன்றைய சமூக அமைப்பை தூக்கி எறிந்துவிட்டு சோசலிச அமைப்பை கட்டுவதுதான் இளம் அரசியல் ஊழியர்களின் கடமை என்பதை. 1931 இல் வெளியிட்ட உணர்ச்சிமிக்க அவரது வேண்டுகோளில் பகத்சிங் வலியுறுத்தியுள்ளார். மார்க்சிய தத்துவத்தை பின்பற்றி தொழிலாளி, விவசாயிகளை அணிதிரட்டுமாறும். கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்குமாறும் அந்த வேண்டுகோளில் கூறியுள்ளார். நமது புரட்சிப் படை வீரர்கள் கிராமப் பகுதிகளிலும்,தொழிற்சாலைகளிலும் உள்ளனர். விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களே நமது புரட்சிப்படை வீரர்கள். நமது முதலாளிகளால் அவர்களை அடக்கி ஒடுக்க விட முடியாது. தூங்கிக் கிடக்கும் அந்த சிங்கங்கள் ஒருமுறை தூக்கம் கலைந்து விழித்து எழுந்து விட்டால். உலகில் உள்ள எந்த சக்தியாலும் அவர்களை அடக்கி ஒடுக்கி விட முடியாது என விவசாயி தொழிலாளிகள் ஒன்றிணைவதால் ஏற்படும் சக்தியை குறிப்பிட்டுள்ளார். இதுவே சமூக விடியலுக்கான முன்னணி படை ஆகும் என்பதை மிகச்சரியாக கணித்துள்ளார்.




பயிரை விளைவிக்கும் விவசாயி குடும்பத்தோடு பட்டினி கிடக்கிறார். ஆடை நெய்யும் நெசவாளி தனது உடலை மறைக்க துணி இன்றி இருக்கிறான். நாகரிகம் என்னும் மாளிகையை காலத்தில் காப்பாற்றா விட்டால் அது நொறுங்கிப் போகும். எனவே ஒரு தீவிரமான மாறுதல் தேவை. இதை புரிந்து கொண்டவர்களின் கடமை இந்த சமூகத்தை சோசலிச சமூகமாக மாற்றுவதுதான். இதை செய்யாமல் மனிதனை மனிதன் சுருண்டுவதையும், நாடுகள் மற்ற நாடுகளை சுரண்டுவதையும் எவ்வாறு முடிவுக்கு கொண்டுவர முடியும் என்கிற கேள்வியை பகத்சிங் எழுப்புகிறார். அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம் – சமரன்

**நூலாசிரியர் : எஸ்.ஏ. பெருமாள்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ்**
**142,ஜானி ஜான்கான் சாலை இராயப்பேட்டை, சென்னை – 14, செல்: 044 28482441**
**பக்கங்கள் : 96 விலை : ரூ.85**

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

சுழலும் உலகம்

## அமைதி மற்றும் சோசலிசத்திற்காகப் போராடுவோம்!




# போர் வேண்டாம்!

## பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சி முழக்கம்

கடந்த சில வாரங்களாகவே, ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் சூழல் பற்றிய பரப்புரை, செய்தி ஊடகங்களை ஆக்கிரமித்து வருகின்றன. இந்தப் போர் அபாயம், அமெரிக்கா, நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நலன்கள் மற்றும் திட்டங்களுக்கு சாதகமாக அமையும் என்பதோடு ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையிலான போட்டியில் ரஷ்ய கூட்டமைப்பைச் சுற்றி வளைக்கவும் பயன்படுத்தப்படும்.

அமெரிக்கா, நேட்டோ, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ரஷ்யாவுக்கு இடையே அதிகரித்து வரும் போர் சூழல் மற்றும் பதற்றம் உலக மக்களுக்கு பேரபாயத்தை ஏற்படுத்தக் கூடியது ஆகும். எனவே, இந்த அச்சுறுத்தல் உடனடியாக தவிர்க்கப்பட வேண்டும் என்ற உழைக்கும் வர்க்க மக்களின் கவலையை பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சி முன்னிலைப்படுத்துகிறது.

மக்களுக்கான நியாயமான அவசியத் தேவைகள் அதிக அளவில் இருக்கும்போது, நேட்டோ ஒப்பந்தப்படி, நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி.) ராணுவத்திற்கு இரண்டு சதவிகிதம் (14 பில்லியன்) ஒதுக்கீடு செய்திட இந்தப் போர் சூழல் பயன்படுத்தப்படுகிறது. முதலாளிகள் செலுத்த வேண்டிய சமூக பங்களிப்புக்கான (social contribution) நிதியைக் குறைப்பதன் மூலமாக 14 பில்லியன் என்ற இலக்கை அடைய முடியும். உண்மையில், அவர்களின் சமூக பங்களிப்பு நிதி இந்தாண்டு 18 பில்லியன் ஆகும். இவ்வாறு கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி ஆகியவற்றுக்கு தேவையான நிதி மேலும் பன்மடங்கு குறைக்கப்பட்டு போருக்கான நிதிச்சுமை கூட்டப்படுகிறது. முதலாளித்துவ அரசாங்கத்தின் நோக்கம் இதில் தெளிவாக இருக்கிறது.

1980ஆம் ஆண்டிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணைக்கிணங்க வீட்டு வசதிக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப் பட்டு வருகிறது.

ஏகாதிபத்திய சக்திகள் தங்களின் சொந்த ஏகபோகத் திற்காக போட்டிகளை உருவாக்கி ஈடுபட்டு வருகின்றன. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகளில் மட்டுமின்றி ரஷ்யாவிலும்கூட, தொழிலாளர்கள் மீதான உழைப்புச் சுரண்டல் அதிகரித்து வருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணைகள் பெல்ஜிய அரசாங்கத்தின் கொள்கைகளாக நிலைமாற்றம் பெற்று, அந்தக் கொள்கைகளின் மூலமாக பெல்ஜியம் நாட்டின் உழைக்கும் மக்கள் சுரண்டப்படுவது மேலும் அதிகரித்து வருகிறது.

முதலாளித்துவம் அதன் ஏகாதிபத்திய கட்டத்தில் இருப்பதை உக்ரைனில் நிலவும் போர் மற்றும் பதற்ற மான சூழல் உணர்த்துகிறது. இந்தக் கட்டத்தில் சந்தை, மூலப்பொருட்கள், சேவைகள் மற்றும் உபகர ணங்கள் வழங்கும் சிக்கலான செயல்முறைகள் ஒருங் கிணைப்புக்கான கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து தடங்களுக்கான உலக அளவிலான போட்டி மிகுதியாக இருக்கும். இந்த அடிப்படையில் உக்ரைன் நாட்டின் சூழலை நோக்கும்போது, ஐரோப்பாவிற்கான எரிவாயு வழங்கல் என்பது உக்ரைன் நாட்டின் பிரதானமான விஷயம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள முடியும். ஆயுத தளவாட உற்பத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்துத் தொழில்களின் முதலாளிகளும் தற்போதைய போர் சூழல் காரணமாக பெரும் பயனீட்டுவர் என்பது தெளிவாகிறது.

இந்தப் பின்னணியில் பெல்ஜியத்தில் கடந்த 5ம் தேதி நடைபெற்ற போராட்டம் அமைதிக்கான இயக்கத்தை புனர மைத்திட நல்ல தொடக்கமாக அமைந்துள்ளது.

நேட்டோ அமைப்பிலிருந்து பெல்ஜியம் வெளியேற வேண்டும்; ஏகாதிபத்திய கூட்டணியிலிருந்தும் ஆயுதங்கள் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் நாடுகளின் கூட்டணியிலிருந்தும் பெல்ஜியம் வெளியேற வேண்டும்.

முதலாளித்துவ அரசு ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட அதிகாரக் கட்டமைப்புகள், முதலாளித்துவம்/ஏகாதிபத் தியத்திற்கு எதிரான உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட போராட்டத்திற்கான அணியை உருவாக்க வேண்டும்.

போருக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கும் உழைக்கும் வர்க்க மக்களிடையே சர்வதேசிய ஒற்றுமை மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை மேலும் வலுப் பெறச் செய்ய வேண்டும், அமைதியும் சோசலிசமும் கொண்ட சமூதாயம் கட்டமைக்கப்பட வேண்டும். ஆகி யவை இந்த இயக்கத்தின் பிரதான நோக்கங்களாக முழங் கப்பட்டுள்ளன.

## ஐரோப்பாவைத் துண்டாட
# அமெரிக்காவின் கூட்டு சதி!

### உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் பெட்ரோ சிமோநென்கோ கருத்து

ஐரோப்பாவைத் துண்டாட மேற்கத்திய உளவு அமைப்புகள் சதித்திட்டம் தீட்டி வருவதாகவும், ரஷ்யாவுடன் ஒரு போருக்கு அமெரிக்கா ஆயத்த மாகி வருவ தாகவும் உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி யின் பொதுச் செயலாளர் பெட்ரோ சிமோநென்கோ கருத்து தெரிவித்துள்ளார்.




அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் போலந்து ஆகிய மூன்று நாடுகளைக் கொண்ட ராணுவ கூட்டணி ஒன்று உருவாகி வருவதாகவும், அந்தக் கூட்டணி உக்ரைனின் ஆளும் வர்க்க நாஜி கூட்டத்துடன் இணக்கமாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையானது சர்வதேச மூலதனத்தின் உத்தரவுக்கிணங்க அமெரிக்கா மற்றும் நேட்டோ ஆகிய அமைப்புகள் ஐரோப்பாவை மறு வரையறை செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக் கையாகும். போர் வெடிக்க வேண்டும் என்று தீவிரமாக இயங்கி வரும் சி.ஐ.ஏ. உள்ளிட்ட உளவு அமைப்புகளுடன் உக்ரைன் அதிபர் செலென்ஸ்கி தற்போது மிக நெருக்கமாக ஒத்து ழைக்கிறார் என்று உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் பெட்ரோ குற்றம் சாட்டுகிறார்.

2020ஆம் ஆண்டு லண்டன் நகரில் எம்.ஐ.6 என்ற உளவு அமைப்பின் தலைவருடன் நடைபெற்ற அதிபர் செலன்ஸ்கியின் சந்திப்புகள், 2022ஆம் ஆண்டு கீவ் நகரில் ஜனவரி மாதம் சி.ஐ.ஏ. அமைப்பின் தலை வருடனான அவரது சந்திப்பு தற் போதைய சூழலில் முக்கியத்துவம் கருதி விவா திக்கப்படுகின்றன. இந்த மூன்று நாடுகள் கொண்ட ராணுவ கூட்டணி திடீரென்று உரு வானது அல்ல. வரலாற்று ரீதியாகவே ரஷ்யா மற்றும் உக்ரைன் மக்களுக்கு எதிரான அச்ச உணர்வை பிரிட்டனும் போலந்தும் அவற்றின் நலன் களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டன. முன்பு ஹிட்லருடன் இணைந்து அப்பாவி மக்களைக் கொன்றழித்த கூட்டத்தார்(போலீஸ் மற்றும் எஸ்.எஸ்.படை பிரிவைச் சார்ந்த போர் வீரர்கள்) அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகளின் சிறப்பு உளவுப் படை உள்ளிட்ட பிரிவுகளில் இயங்கி வந்தனர்.

அவர்களின் சித்தாந்த வழித் தோன்றல்கள்தான் இப்போது ரஷ்யாவுக்கு எதிரான அச்ச உணர்வு மற்றும் போர் சூழலைத் தீவிரமாக் குவதற்காகக் களமிறக்கப்பட்டு வருகிறார்கள். சி.என்.என். மற்றும் வாஷிங்டன் போஸ்ட் உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் போருக்கான பரப்புரையில் ஈடுபட்டு வருவதை அனைவரும் அறிவர். ஊடக நிறுவனங்கள் நாஜிக்களின் பிரச்சார பீரங்கியாக திகழ்ந்த ஜோசப் கோயபல்ஸ் பாதையில் பயணிக்கிறார்கள்.

இவ்வாறு உக்ரைன் நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கருத்து கூறியுள்ளார்.



டாக்டர்
ஜி.ஆர்.ரவீந்திரநாத்

# தனியார் மற்றும் நிகர்நிலை பல்கலைக் கழகங்களின் 50% மருத்துவ இடங்களுக்கு சட்டப்படி கட்டணம் நிர்ணயித்திடுக

1. **மருத்துவக்கல்லூரிமாணவர்களுக்கானசேர்க்கைநடைபெற்று வருகிறது.**

இந்நிலையில் தேசிய மருத்துவ ஆணையம் தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலை மருத்துவப் பல்கலைக் கழகங்களில் உள்ள மருத்துவ இடங்களில் 50 விழுக்காடு இடங்களுக்கு, அந்தந்த மாநில அரசுகளின் மருத்துவக் கல்லூரிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்துக்கு இணையாக மட்டுமே வசூலிக்க வேண்டும் எனக் கூறியுள்ளது. ஆனால் இதுவரை அதை நடைமுறைப்படுத்துவதற்கான அரசாணைகள் வெளியிடப்படவில்லை.

மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையை நடத்துவதற்கு முன்பாகவே, இந்த கட்டண நிர்ணய ஆணையை மத்திய மாநில, அரசுகள் வெளியிட்டால்தான், தனியார் மருத் துவ கல்லூரிகளிலும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் சேரமுடியும். எனவே, உடனடியாக அரசாணைகளை வெளியிட வேண்டும்.

தமிழக அரசு உடனடியாக, மத்திய அரசை வலியுறுத்தி, தமிழ்நாடு அரசு மருத்துவ கல்லூரிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணமான ரூபாய் 13,650 மட்டுமே, தமிழ்நாட்டில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரிகளுக்கும் நிர்ணயித்து அரசாணையை வெளியிட வேண்டும்.

இக்கட்டண நிர்ணயம், கறாராக நடைமுறைப் படுத்தப்படுகிறதா? அல்லது கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா? என்பதை கண்காணிக்க ஒரு குழுவையும் அமைக்க வேண்டும்.

கட்டணக் கொள்ளையில் ஈடுபடுகின்ற தனியார் மருத்துவக் கல்லூரிகள் மீது கடுமையான நடவடிக்கையை எடுத்திட வேண்டும். கட்டாய நன்கொடை தடுப்புச் சட்டத்தில் தண்டனைகளை கடுமையாக்கிட உரிய திருத்தங்களை மத்திய மாநில, அரசுகள் செய்திட வேண்டும்.

2. உயர்சிறப்பு மருத்துவப் படிப்புகளில் அரசு மருத்துவர்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்கிட வேண்டுமென்ற சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை இந்த ஆண்டு முதலே நடைமுறைப்படுத்த, மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.தமிழக அரசுக்குச் சொந்தமான மருத்துவ கல்லூரிகளில் உள்ள 100 சதவீத உயர்சிறப்பு மருத்துவ இடங்களையும் முன்பு இருந்தது போல் தமிழகத்துக்கே வழங்கிட வேண்டும்.

3. ஒன்றிய பாஜக அரசு மருத்துவக் கல்வியை “காவி மயமாக்கி” வருகிறது. மருத்துவக் கல்வியில் இந்துத்துவ சித்தாந்தத்தை திணிக்கிறது.குறிப்பாக மதச்சார்பற்ற ’நவீன அறிவியல் மருத்துவ’த்தை **(Modern Scientific Medicine)** நீர்த்துப் போகச் செய்ய முயல்கிறது.

நவீன அறிவியல் மருத்துவம் ஒரு மேற்கத்திய மருத்துவம், ஆங்கில மருத்துவம், கிறிஸ்தவ மருத்துவம், அந்நிய மருத்துவம் என்று புரிந்து கொள்ளக் கூடாது. ஆனால் இவ்வாறு புரிந்து கொள்வதுடன், இம்மருத்துவத்தை ஒழித்திட நினைக்கிறது. நவீன அறிவியல் மருத்துவம் என்பது எந்த ஒரு நாட்டுக்கோ, எந்த ஒரு பண்பாட்டுகோ, எந்த ஒரு மக்கள் பிரிவினருக்கோ சொந்தமானது அல்ல.

இன்றைய நவீன அறிவியல் மருத்துவம் என்பது, ஒரு உலகளாவிய மருத்துவமாகும். சர்வதேச மருத்துவமாகும்.

அதன் வளர்ச்சிக்கு உலகம் முழுவதும் உள்ள அறிஞர்கள், விஞ்ஞானிகள் பங்களிப்பை செலுத்தி வருகின்றனர்.

நவீன அறிவியல் மருத்துவம் திடீரென்று வானத்திலிருந்து குதித்து வந்ததல்ல.

உலகின் பல்வேறு பகுதிகளில் நிலவிய பண்டைய சமூகங்களின், பண்டைய மருத்துவ முறைகள் அனைத்தும் நவீன அறிவியல் மருத்துவம் வளர்வதற்கு உதவியுள்ளன. அடித்தளமாக இருந்துள்ளன.

பண்டைய மருத்துவ முறைகளில் உள்ள ஏற்கத்தக்க அறிவியல் ரீதியான விஷயங்களை ஏற்று, அவற்றை வளர்த்தெடுத்து நவீன மருத்துவம் பரிணமித்துள்ளது.

ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற் புரட்சியும், அறிவியல் தொழில் நுட்பப் புரட்சியும், இதன் வளர்ச்சி புதிய சிகரங்களை எட்டிட உதவியது.

இன்று பல்வேறு அறிவியல் துறைகளில் நிகழ்ந்துள்ள புதிய கண்டுபிடிப்புகளையும், தொழில் நுட்ப முன்னேற்றங்களையும் உடனடியாக உள்வாங்கி, நவீன அறிவியல் மருத்துவம் செழுமை பெற்றுள்ளது. மேலும் பெற்றுவருகிறது; பெறும்.

நவீன அறிவியல் மருத்துவம் தற்பொழுது மிக வேகமாக வளர்ந்து வருகிறது.

இந்த நவீன அறிவியல் மருத்துவம் தான் கொரோனா பெருந்தொற்று சூழலில் உலக மக்களை காத்துள்ளது.

ஆனால் ஒன்றிய அரசின் சித்தாந்தவாதிகள் இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல், நவீன அறிவியல் மருத்துவம் ஒரு அந்நிய மருத்துவம் எனக் கருதி, அதை ஒழித்துக்கட்ட முயல்கின்றனர். மருத்துவத்தை இந்துத்துவா அடையாள அரசியலுக்கு, மதவெறி அரசியலுக்கு பயன்படுத்த முனைகின்றனர்.

நவீன அறிவியல் மருத்துவம் என்பது ஒரு மதச்சார்பற்ற மருத்துவமாகும்.

**பண்டைய இந்திய மருத்துவரான “சரகர்” அவர்களின், திரிக்கப்பட்ட உறுதிமொழியை மதச்சார்பற்ற நவீன அறிவியல் மருத்துவம் பயிலும் மாணவர்கள் அனைவரும் உறுதிமொழியாக ஏற்க வேண்டுமென தேசிய மருத்துவ ஆணையம் முடிவு செய்து அறிவித்திருப்பது ஏற்புடையது அல்ல. “சரகர் உறுதிமொழி”யை இந்துத்துவா அடிப்படையில் மத்திய அரசு கையாள்கிறது.இது மருத்துவம் பயிலும் பல்வேறு சிறுபான்மை பிரிவினரின் உணர்வுகளுக்கும், மதச்சார்பற்ற மருத்துவர்களின் உணர்வுகளுக்கும் எதிரானதாகும்.**

இத்தகைய “இந்துத்துவ” கருத்தியலை திணிக்கும் போக்கை ஒன்றிய அரசு உடனடியாக கைவிட வேண்டும்.

கொரானா தடுப்புக்காக விளக்கேற்றுதல், அப்பளம் உண்ணுதல், சேறு மற்றும் சாணிக் குளியல், கங்கை நீர் சிகிச்சை, கோமியம் குடித்தல் போன்றவை சங்பரிவார அமைப்புகளால் ஊக்கப்படுத்தப்பட்டன. இவற்றை தடுக்க மத்திய அரசு முனையவில்லை.

கோமியம் மற்றும் பஞ்சகவ்ய மற்றும் பசு ஆராய்ச்சிக்கான நிதி ஒதுக்கீடுகள் அறிவியலுக்கு புறம்பானாது. மதவாத அரசியல் உள் நோக்கம் கொண்டது.

ஒன்றிய அரசு யோகா பயிற்சியையும் மருத்துவ மாணவர்களுக்கு கட்டாயமாக்கியுள்ளது. மருத்துவர்களை மத ரீதியாக பிளவு படுத்தும் நோக்கம் இதில் உள்ளது. யோகாவை ஒரு உடற்பயிற்சியாக தனிப்பட்ட நபர்கள் மேற்கொள்வதில் தவறில்லை. ஆனால் யோகாவை இந்துத்துவ அடையாள அரசியலுக்கு கருவியாக பயன் படுத்துவது தவறாகும்.

ஒன்றிய அரசின் இத்தகையப் போக்கு நமது அரசியல் சட்டத்திற்கும், மதச்சார்பின்மைக்கும், ஜனநாயகத்திற்கும், அறிவியல் மனப்பான்மைக்கும், அறிவியல் முன்னேற்றத்திற்கும் எதிரானதாகும்.

ஒருங்கிணைந்த மருத்துவமுறை **(Integrated Medicine)** என்ற பெயரில், நிரூபணமான நவீன அறிவியல் மருத்துவ முறைகளுடன், காலாவதியான மருத்துவ முறைகளை, நிரூபணமாகாத மருத்துவ முறைகளை, போலி மருத்துவ அறிவியலை கலப்பது **(Mixing )**, ஒருங்கிணைக்க **(Integrate )** முயல்வது, நவீன அறிவியல் மருத்துவத்தின் தரத்தை, வளர்ச்சியை மிக மோசமாக பாதிக்கும். இத்தகைய முயற்சிகளை ஒன்றிய அரசு உடனடியாக கைவிட வேண்டும்.

4. தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளிலும், மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்கள் மற்றும் மாணவிகள் விடுதிகளை மேம்படுத்தி, அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும்.

5. பழமையும், பெருமையும் வாய்ந்த சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவம், பல் மருத்துவம், செவிலியம், ஃபிசியோதெரப்பி, மருந்தியல், துணை மருத்துவப் படிப்புகள் போன்ற பிரிவுகளில் இளநிலை, முதுநிலை, உயர்சிறப்பு மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகள் என பல்வேறு படிப்புகள் உள்ளன. ஆயிரக்கணக்கான மாணவர்கள் அங்கு படிக்கின்றனர்.

இந்த மாணவர்கள் தான் 7000 க்கும் மேற்பட்ட உள்நோயாளிகளுக்கும், பல்லாயிரக்கணக்கான புற நோயாளிகளுக்கும் சாதாரண காலத்திலும், அவசர காலத்திலும்,பெருந்தொற்று காலத்திலும், 24 மணி நேரமும் 365 நாட்களும் மருத்துவ சேவை வழங்குவதில் பெரும் பங்காற்றுகிறார்கள்.

அச்சேவை புரிய அவர்களுக்கு மருத்துவமனை வளாகத்திலேயோ அல்லது அதற்கு மிக அருகிலேயோ பாதுகாப்பான, அனைத்து வசதிகளுடன் கூடிய தங்குவதற்கான விடுதி வசதிகளை செய்து தர வேண்டியது அவசியம்.

பல்மருத்துவம், செவிலியப் படிப்பு, பிசியோதெரப்பி, மருந்தியல், துணை மருத்துவப் பிரிவுகள் போன்ற பிரிவுகளில் பயிலும் மாணவர்கள் விடுதிகளில் இட நெருக்கடி அதிகமாக உள்ளது. இவர்களுக்கு போதுமான விடுதி வசதி அமைத்து தரவேண்டும்.

சென்னை ராஜிவ் காந்தி மருத்துவமனையில், முதுநிலை மற்றும் உயர் சிறப்பு மருத்துவ மாணவர்களுக்குக் கூட தங்களது வாகனங்களை நிறுத்தும் வசதி இல்லை. இதனால் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். அங்கு பணி புரியும் மருத்துவர்களுக்கும், குடியிருப்புகளும் வாகன நிறுத்த வசதிகளும் போதுமானதாக இல்லை.

பொது மக்கள், மருத்துவமனையின் நலன், மாணவர்கள் மற்றும், மருத்துவர்கள் நலன் காக்க மேற்கூறிய கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டும்.

சென்னை மருத்துவக் கல்லூரிக்கு பக்கத்தில் உள்ள, அனைத்து அரசு இடங்களையும் ஆய்வு செய்து, புதிய இடங்களை தேர்ந்தெடுத்து இயன்ற வரை மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை விரிவாக்கத்துக்குப் பயன்படுத்திட வேண்டும்.

இந்நிலையில் சென்னை மருத்துவக் கல்லூரி முதுநிலை, உயர் சிறப்பு மாணவர்களுக்கான விடுதியை வேறு இடத்திற்கு மாற்றவும் அவ்விடத்தை , மருத்துவம் சாரா வேறு துறைகளுக்கு மாற்றவும் முயற்சிகள் நடப்பதாகக் கூறப்படுகிறது. அத்தகைய முயற்சிகள் மக்கள் நலனுக்கு எதிரானது. அம்முயற்சிகளை உடனடியாக கைவிட வேண்டும்.

அரசு மருத்துவர்களின் ஊதிய உயர்வு கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும்.

தொடர்புக்கு: **9940664343**















JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 19.02.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# தாய்த் தமிழ்ப் பள்ளிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதி உதவி செய்ய வேண்டும்

## தமிழக முதல்வருக்கு கே.சுப்பராயன் எம்.பி. வேண்டுகோள்



நிதி நெருக்கடியில் திணறிவரும் தாய்த் தமிழ்ப் பள்ளிகளுக்கு நிதி உதவி செய்யக்கோரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கே.சுப்பராயன் எம்.பி. எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் தற்போது சுமார் 21 தாய்த் தமிழ் பள்ளிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் சுமார் 2000 மாணவர்கள் படித்து வருகின்றனர். இவர்கள் தமிழையும், தமிழ் வழி அறிவையும் பெற்று வருகின்றனர்.

ஆங்கிலக் கல்வி மோகத்தால் சிறுகச் சிறுக தமிழ் வழிக் கல்வி முறை சுருங்கி வருகிறது. இது தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் பெரும் தீங்காக முடியும் என்பதை நிகழ்காலத் தலைமுறை உணர வேண்டும். அதை மாநில அரசு உணர்த்த வேண்டும் என பணிந்து வேண்டுகிறேன்.

"மெல்லத் தமிழினி சாகும்" என்ற மகாகவி பாரதியாரின் எச்சரிக்கை இன்றைய தமிழ்நாட்டின் சூழலிற்கும் பொருந்துவதாகவே உள்ளது. புற்றீசல் போலத் தோன்றி வளர்ந்துவரும் ஆங்கில வழி மழலையர் பள்ளிகள் பிஞ்சுக் குழந்தைகளின் சிந்தனையில் இருந்து தாய்த் தமிழுணர்வை அகற்றி அழித்து வருகின்றன. எனவே, தாய்த் தமிழ் மழலையர் பள்ளிகளை மாநில அரசே தொடங்கி நடத்தத் திட்டமிடுவதோடு தற்போது தமிழ்நாட்டில் தமிழ் ஆர்வலர்களால் இயக்கப்படுகின்ற தாய்த் தமிழ் பள்ளிகளுக்கு நிதி உதவி அளித்து அவற்றை நிதி நெருக்கடியில் இருந்து மீட்டு ஊக்குவிக்க வேண்டும் என வேண்டுகிறேன்.

இதுகுறித்து தாய்த் தமிழ் பள்ளி அமைப்பினரோடு மாநில அரசு கலந்துரையாடி கருத்தறிய வேண்டும். தமிழ்நாட்டில் தமிழ் மழலையர் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் தொடங்கி நடத்திட பொருத்தமான ஊக்கத் திட்டங்களை, சலுகைகளை மாநில அரசு அறிவிக்க வேண்டும் எனக் கோருகிறேன். இதன்மூலம்தான் பிஞ்சு மனங்களில் தமிழ் ஆர்வ விதைகளை விதைக்கவும் அது முளைவிட்டு வளர்வதற்குமான சூழல் தோன்றும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆலோசனைகள் தமிழ்நாட்டில் தாய்த் தமிழை பிஞ்சுக் குழந்தைகளிடம் கொண்டு செல்ல உதவும் என்பதை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இவ்வாறு மனுவில் கூறியுள்ளார்.

# திம்பம் மலைச்சாலையில் இரவுப் போக்குவரத்து தடையை நீக்கக் கோரி போராட்டம்



## தாளவாடியில் முழுகடையடைப்பு

## பண்ணாரியில் கண்டன ஆர்ப்பாட்டம்

திம்பம் மலைச்சாலையில் இரவுப் போக்குவரத்து தடையை நீக்கக் கோரி பண்ணாரியில் போராட்டம் நடைபெற்றது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம் தலைமை தாங்கினார்.

பவானிசாகர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் பண்ணாரி, திமுக தாளவாடி ஒன்றியச் செயலாளர் சிவண்ணா, காங்கிரஸ் தலைவர் காள நாயக்கர், தாளவாடி விவசாயிகள் சங்க தலைவர் கண்ணையன், கர்நாடக மாநிலம் சாம்ராஜ் நகர் பகுதி விவசாயிகள், சத்தியமங்கலம், தாளவாடி வணிகர் சங்கத்தினர், வாகன ஓட்டுநர்கள் உரிமையாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட சுமார் மூவாயிரம் பேர் பங்கெடுத்தனர். தாளவாடியில் முழு கடையடைப்பும் நடைபெற்றது.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் மலைப்பாதையில் இரவுப் போக்குவரத்திற்கு சென்னை உயர்நீதி மன்றம் 08.02.2022ம் நாள் தடையினை விதித்துள்ளது.

மக்களின் நலன், அவர்களது வாழ்வாதாரம் போன்ற எவற்றையும் கணக்கில் கொள்ளாமல், வன விலங்கு பாதுகாப்பை மட்டும் மையமாக வைத்து இத்தடை போடப்பட்டது.

இரவு நேர போக்குவரத்து தடையின் காரணமாக, வனப்பகுதியின் இரு முனைகளிலும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் இரவு நேரத்தில் தேங்கி, மாறுநாள் காலை புறப்படும்போது, கடும் போக்குவத்து நெருக்கடி ஏற்பட்டு, 2 மணி நேரத்தில் சத்திய மங்கலத்தில் இருந்து தாளவாடி செல்ல வேண்டிய வழக்கமான பேருந்துகள் கூட செல்வதற்கு மதியம் ஒரு மணியானது. இதனால், தாளவாடி மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் சீர்குலைந்தது. அரசு அலுவலகங்கள் இயங்க இயலவில்லை. பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் செல்வது தடையானது. மருத்துவ உதவிகள் பெறுவதிலும் தடையேற்பட்டது.

குறிப்பாக தாளவாடி ஒன்றியம், 10 ஊராட்சிகளையும், 75 ஆயிரம் மக்களையும் கொண்ட வன மலைப்பகுதியாகும். சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மிகவும் பின் தங்கிய மக்கள் வாழும் பகுதியும் கூட.

இப்பகுதி மக்களின் பிரதானமான விவசாயம் காய்கறி உற்பத்தி. இங்கு உற்பத்தியாகும் காய்கறிகள் அனைத்தும் மலையிலிருந்து சத்தியமங்கலம் வழியாக மேட்டுப்பாளையம் மார்க்கட்டிற்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.

இப்பிரச்சனையால் உரிய நேரத்தில் மார்க்கட்டிற்கு செல்ல இயலாமல் விவசாயிகள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாவார்கள்.

ஆகவே, திம்பம் மலைச்சாலையில் இரவுப் போக்குவரத்து தடையை நீக்கவும், போக்குவரத்தை தடை செய்யாமல் வன உயிரின பாதுகாப்பிற்கான மாற்று ஏற்பாட்டை செய்து, மக்களின் மற்றும் வன உயிரினங்களின் நலனை பாதுகாக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் போராட்டத்தில் கோரப்பட்டது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.